உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கரு.] நள ௵ தை மீ [பகுதி-௩.
Vol. XV. January—February, 1917. No. 3.

## கல்லாடமும் அதன்காலமும்.*

கல்லாடம் என்பது ஆலவாயுறைஇறைவனைப் பாட்டுடைத்தலைவ ராகக்கொண்டு, அகப்பொருட்டுறையில், கல்லாடரென்னும் ஒரு நல் லிசைப்புலவராலியற்றப்பட்டதோ ரரியநூல். இது கடவுள்வாழ்த் தோடு நூற்றுமூன்று ஆசிரியப்பாக்களையுடையது; சொல்லழகும் பொருளழகும் ஒருங்கேவாய்ந்தது. இவ்வரியநூலியற்றினோர் மதுரை யம்பதியில்விளங்கிய கடைச்சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மருள் ஒருவராய கல்லாடனாரென்பர் ஒருசாரார். இதற்கு அன்னோர் எடுத் துக்காட்டும்பிரமாணம் இந்நூலின் சிறப்புப்பாயிரச்செய்யுட்களேயாம். அச்செய்யுட்களை யடியில் வரைகின்றேன்.

வாய்ந்தபொருட்கொருபொருளாய்க்கலைவாணிக்கருள்கொழிக்கு
மன்பாய்ப்பாரி
னாய்ந்தமுதுதமிழ்வடித்துக்கல்லாடமெனவொருநூ
லருளியிட்டார்
தேய்ந்தமதிச்சடைப்பரமர்கருணைபெறச்சங்கமுது
செல்வர்வாழ்த்தக்
காய்ந்தபுலனடக்கியுயர்பெருஞானம்பழுத்தருள்கல்
லாடனாரே.

கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார் சங்கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயு
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்.

* இது, கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் நான்காவதாண்டு நிறைவுவிழாவில் சிதம்பரம் மகா-ள-ள-ஸ்ரீ திவான்பஹதூர் சா. ராம. மு. இராமசாமிச் செட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்ற சபையிற் படிக்கப்பட்டது.

மற்றொருசாரார், இந்நூல் சங்கமருவியநூல்வரிசையிற் சேர்க்கப்பெறுமையால், கடைச்சங்கப்புலவராய கல்லாடனார் இயற்றியதன்றென்பர். அன்றியும், சைவசமயாசாரியராகிய மணிவாசகப்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருச்சிற்றம்பலக்கோவையார், அகப்பொருளியலுக்கு மாறுபடுகின்றமையின் குற்றமுடைத்தென்று கடைச்சங்கப்புலவர்கள் கூறிய கடுமொழியைக் கேட்கப்பொறாது, அன்னோர்கூற்றை மறுத்து, அப்புலவர்களோடு முரண்பட்ட கல்லாடர் என்பார் ஆலவாயில் அருட்பெருங்கடவுளின் திருவருள்பெற்றுத் திருச்சிற்றம்பலக்கோவையாரின் மாட்சியுந் தெய்வத்தன்மையும் அன்னோர்க்கு நன்கு புலப்படுத்துவான், அந்நூலினின்று ஒருநூறு செய்யுட்களைத்திரட்டி அவற்றின் கருத்துக்களகப்பட இந்நூலையியற்றி, அப்புலவர்களைக் கூட்டிச்சென்று, இறைவன்திருமுன்னர் ஓதியபோது அப்பெருமான் சாலமகிழ்ந்து, ஒவ்வொருபாவும் முடியுந்தோறும் தந்திருமுடியைத் துளக்கியருளினரென்றுஞ்சிலர்கூறுப. இக்கூற்றைமேலேவரைந்துள்ள வெண்பா ஆதரிக்கின்றது. ஆனால் கடைச்சங்கப்புலவர்கள் திருச்சிற்றம்பலக்கோவையார் குற்றமுடைத்தென்று கூறினரென்பது சிறிதும் பொருந்தவில்லை; எங்ஙனமெனில் மணிவாசகப்பெருமான் கடைச்சங்ககாலத்திற்குப் பிந்தியவர்களென்பதற்குப் பிரமாணம் அவர்கள் வாக்கினின்றே நாம் காட்டலாம்.* அன்றியும், திருச்சிற்றம்பலக்கோவை

---

*"சிறைவான்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளு
முறைவானுயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழின்
றுறைவாய்நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ
விறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே" என்னுந்

திருக்கோவையாரிற் காணப்படும் இச்செய்யுளில் மணிவாசகப்பெருமான் கூடன்மாநகரில் நிலவியகடைச்சங்கத்தைக் குறித்திருக்கின்றனர். முந்தியசங்கங்களிரண்டும் கடலாற்கொள்ளப்பட்ட தென்மதுரையகத்தும் கபாடபுரத்தும்விளங்கியமையால், கூடலில் 'ஒண்டீந்தமிழாய்ந்த' சங்கம் கடைச்சங்கமாகத்தா னிருத்தல் வேண்டும். அன்றியும் 'ஆய்ந்தவொண்டீந்தமிழ்' என்னுஞ் சொற்றொடரினால் சுவாமிகள்காலத்து அச்சங்கம் நடைபெறவில்லையென்பதும் நன்குவிளங்கும். நிற்க,காலஞ்சென்ற திருவனந்தபுரம்ப்ரொபெஸர் சுந்தரம்பிள்ளை அவர்கள் M.A. கூன்பாண்டியனும் திருஞானசம்பந்தசுவாமிகளும் கி. பி. ஏழாம்நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கியவர்களென்று நிரூபணஞ் செய்துள்ளனர். இக் கூன்பாண்டியற்குப் பத்துத்தலைமுறைகட்கு முன்னிருந்த அரிமர்த்தனபாண்டியனே நம் மாணிக்கவாசகசுவாமிகளை மந்திரியாகக்கொண்டவனென்பது திருவிளையாடற்புராணத்தா லறியப்படுகிறது. தலைமுறை ஒன்றிற்குச் சராசரி ஆட்சிக்காலம் 25 வருடமாக 10 தலைமுறைகட்குச் சென்றது 250 வருடங்களாம். இவ்விருநூற்றைம்பதைக் கூன்பாண்டியன்காலமாகிய அறுநூற்றுமுப்பதில் கழிக்க எஞ்சியது முந்நூற்றெண்பதாம். இதனால், மாணிக்கவாசகசுவாமிகளும் அரிமர்த்தனபாண்டியனும் கி. பி. நான்காம் நூற்றாண்டினிறுதியில் விளங்கியவர்களென்பது புலப்படுதல் கண்டுகொள்க.

யார்க்குச் சிறந்த வுரைவரைந்த புலவர்பெருமானாகிய பேராசிரியரும் தமது அரியவுரையில், இச்செய்தியைக் கூறினாரில்லை.

இனி, இந்நூலாசிரியர் கடைச்சங்கப்புலவருள் ஒருவராய கல்லாடனாரா? அல்லது அப்பெயரேதரித்துப் பிற்காலத்துவிளங்கிய வேறு பெரியோரா? என்பதே ஈண்டு ஆராயவேண்டிய விஷயமாம். இந்நூலுடையார் கடைச்சங்ககாலத்து நிகழ்ந்துள்ள சில நிகழ்ச்சிகளைத் தம்நூலில் குறித்திருக்கின்றனர். அவை கேட்டார்ப் பிணிக்குந்தகையவாய் மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கீழே தருகின்றேன்.

"எழுமலைபொடித்த கதிரிலைநெடுவேல்
வள்ளிதுணைக்கேள்வன் புள்ளுடன்மகிழ்ந்த
கறங்குகாலருவிப் பரங்குன்றுடுத்த
பொன்னகர்க்கூடற் சென்னியம்பிறையோன்
பொதியப்பொருப்பன் மதியக்கருத்தினைக்
கொங்குதேர்வாழ்க்கைச் செந்தமிழ்கூறிப்
பொற்குவைதருமிக் கற்புடனுதவி
என்னுளங்குடிகொண் டிரும்பயனளிக்குங்
கள்ளவிழ்குழல்சேர் கருணையெம்பெருமான்"—என்பது

ஆலவாயெம்பெருமான் "கொங்குதேர்வாழ்க்கை"* என்னுஞ் செந்தமிழ்ப்பாடலருளித்தருமிக்குப் பொற்கிழியுதவியதை யுரைக்கின்றது.

"உலகியனிறுத்தும் பொருண்மரபொடுங்க
மாறனும்புலவரு மயங்குறுகாலை
முந்துறும்பெருமறை முளைத்தருள்வாக்கா
லன்பினைந்திணையென் றறுபதுசூத்திரங்
கடலமுதெடுத்துக் கரையில்வைத்ததுபோற்
பரப்பின்றமிழ்ச்சுவை திரட்டிமற்றவர்க்குத்
தெளிதரக்கொடுத்த தென்றமிழ்க்கடவுள்"—என்பது

கூடல்வாழிறைவன் "களவியல்" அருளியவரலாற்றைக் கூறுகின்றது.

"சமயக்கணக்கர் மதிவழிகூறா
துலகியல்கூறிப் பொருளிதுவென்ற
வள்ளுவன்றனக்கு வளர்கவிப்புலவர்முன்
முதற்கவிபாடிய முக்கட்பெருமான்"—என்பது

தமிழ்ச்சங்கப்புலவர்முன் இறைவன் திருக்குறளுக்குச் சிறப்புக்கவியாக முதற்கவிகூறியருளியதை யுணர்த்துகின்றது.

---

*கொங்குதேர்வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ
பயிலியதுகெழீஇய நட்பின்மயிலியற்
செறியெயிற்றரிவைகூந்தலி
னறியவுமுளவோ நீயறியும்பூவே.—குறுந்தொகை.

"அருந்தமிழ்க்கீரன் பெருந்தமிழ்ப்பனுவல்
வாயிற்கேட்ட காயங்களத்தினன்,"—என்பது

சோமசுந்தரக்கடவுள் பொற்றாமரைக்கரையி லெழுந்தருளிக் கடைச் சங்கப்புலவர் தலைவராய நக்கீரனார் கூறிய கோபப்பிரசாதம் பெருந் தேவபாணி முதலிய செந்தமிழ்நூல்களைக் கேட்டருளியதைக் குறிக் கின்றது.

"அருமறைவிதியு முலகியல்வழக்குங்
கருத்துறைபொருளும் விதிப்படநினைந்து
வடசொன்மயக்கமும் வருவனபுணர்த்தி
யைந்திணைவழுவா தகப்பொருளமுதினைக்
குறுமுனிதேறவும் பெறுமுதற்புலவர்க
ளேழெழுபெயருங் கோதறப்பருகவும்
புலனெறிவழக்கிற் புணருலகவர்க்கு
முற்றவம்பெருக்கு முதற்றாபதர்க்கு
நின்றறிந்துணர்த்தவுந் தமிழ்ப்பெயர்நிறுத்தவு
மெடுத்துப்பரப்பிய விமையவர்நாயகன்,"—என்பது

ஆலவாயெம்பெருமான் "களவியல்" அருளியவரலாற்றை விளக்கு கின்றது.

மேற்காட்டிய சரித்திரங்களை மிக்க அழகாகத் தம்நூலிற் கூறிப் போந்த இவ்வாசிரியர் கடைச்சங்ககாலத்திற்குப் பிற்பட்டவராயிருத் தல்வேண்டுமென்பது நன்குவிளங்கும்.* இனி ஆலவாயெம்பெருமான்

* இந்நூலுடையார், கூடல்நாயகன் "களவியல்" அருளியவரலாற்றைக் கூறுமிடங்களில், "மாறனும்புலவருமயங்குறுகாலை—அன்பினைந்திணையென் றறுபதுசூத்திரந்—தெளிதரக்கொடுத்த"னரென்றும், "ஐந்திணைவழுவாதகப் பொருளமுதினைக்—குறுமுனிதேறவும் பெறுமுதற்புலவர்க—ளேழெழுபெயருங் கோதறப்பருகவும்—எடுத்துப்பரப்பி"னரென்றும் உரைக்கின்றனர். அன்றியும் திருக்குறட்கு அப்பெருமான் சிறப்புக்கவியருளியதைக் குறிக்குங்கால், "வள்ளு வன்றனக்குவளர்கவிப்புலவர்முன் — முதற்கவிபாடிய"ருளினரென்றும் கூறு கின்றனர். இவற்றால் இவ்வாசிரியர் கடைச்சங்கப்புலவருள் ஒருவரல்லரென் பது நன்குதெளியப்படும். எங்ஙனமெனில், இவர் கடைச்சங்கப்புலவர் நாற்பத் தொன்பதின்மருள் ஒருவராயிருப்பின், "மாறனும்புலவருமயங்குறுகாலை"யென் றதை, "மாறனும்யாமும்மயங்குறுகாலை" யென்றும், "வளர்கவிப்புலவர்முன் னென்றதை, "எம்முன்" என்றுங் கூறல்வேண்டும். இவர் அங்ஙனங்கூறாமை யின், கடைச்சங்கப்புலவருள் ஒருவரல்லரென்பது இனிதுணரப்படும்.

அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் செய்தருளியபின்னரே நம் மாசிரியர் இந்நூலியற்றியுள்ளாரென்பது, "எட்டெட்டியற்றியகட்டமர் சடையோன்," என்னுங் கல்லாடச்செய்யுளடியால் அறியப்படும். அறுபத்திரண்டு அறுபத்துமூன்றாவது திருவிளையாடல்கள், திருஞானசம்பந்தசுவாமிகள் கூன்பாண்டியற்குச் சுரந்தீர்த்ததையும் சமணரைக் கழுவேற்றியதையும் பற்றியனவாகலின், இந்நூலுடையார், கடைச்சங்ககாலத்திற்குப் பிந்தியவராகிய திருஞானசம்பந்தசுவாமிகட்குப் பிற்பட்டவராதலுணர்ந்துகொள்க. அன்றியும்,

> "பரிபுரக்கம்பலை யிருசெவியுண்ணுங்
> குடக்கோச்சேரன் கிடைத்திதுகாண்கென
> மதிமலிபுரிசைத் திருமுகங்கூறி
> யன்புருத்தரித்த வின்பிசைப்பாணன்
> பெறநிதிகொடுக்கென வுறவிடுத்தருளிய
> மாதவர்வழுத்துங் கூடற்கிறைவன்."

என்னும் செய்யுளடிகளில் கூடல்நாயகன் தமது அன்பனாகிய பாணபத்திரர்க்குப் பொருளளிக்கும்வண்ணம் சேரமாற்கு, 'மதிமலிபுரிசை மாடக்கூடல்' என்னுந் திருமுகப்பாசுரம் விடுத்தருளியதைக் கல்லாடமுடையார் கூறியிருக்கின்றனர்.

சேரநாட்டில் திருவஞ்சைக்களத்திற்கருகிலுள்ள கொடுங்கோளூரிலிருந்து ஆட்சிபுரிந்தவரும், சைவசமயாசாரியராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகட்குப் பெருநட்பினரும், அவர்களுடன் திருக்கைலாயஞ் சென்று ஆங்குச் சிவபெருமான் திருமுன்னர்த் தாமியற்றிய திருக்கைலாயஞானவுலாவை யரங்கேற்றியவரும், 'கழறிற்றறிவார்' என்னுந் திருநாமத்துடன் சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவராக விளங்குகின்றவரும் இச்சேரர்பெருமானேயென்பது திருத்தொண்டர்புராணத்துள்ள கழறிற்றறிவார்புராணத்தால் நன்கறியக்கிடக்கின்றது. இனி, நடராஜப்பெருமானை நாடோறும்பூசித்துவந்த இச்சேரமான், அவ்விறைவன் திருச்சிலம்பொலியை நாளும் தஞ்செவியாரக் கேட்டுவந்தனரென்பதை,

> "வாசத்திருமஞ்சனம்பள்ளித்தாமஞ்சாந்தமணித்தூபந்
> தேசிற்பெருகுஞ்செழுந்தீபம்முதலாயினவுந்திருவமுது
> மீசற்கேற்றபரிசினாலருச்சித்தருளவெந்நாளும்
> பூசைக்கமர்ந்தபெருங்கூத்தர்பொற்பார்சிலம்பினொலியளித்தார்."

என்னுந் திருத்தொண்டபுராணச் செய்யுளாலறியலாம். இதனை, நமது கல்லாடனாரும் 'பரிபுரக்கம்பலையிருசெவியுண்ணுங்-குடக்கோச்சேரன்' என்று தம்நூலில் மிகச்சுருக்கமாய்க் குறித்திருக்கின்றனர். ஆகவே,

இச்சேரலற்குப் பிந்தியவரே நமது கல்லாடனாரென்பது இனிதுவிளங்கும். இச்சேரர்பெருமானும் சுந்தரமூர்த்திசுவாமிகளும் பெருநட்பினர்களென்றும், இருவருஞ்சேர்ந்து ஒரேகாலத்தில் திருக்கைலாயஞ் சென்றவர்களென்றும் முன்னரே கூறியுள்ளேன். இதனால், சைவ சமயாசாரியராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள்காலத்திற்குப் பிந்தியவரே கல்லாடமுடையாரென்பது நன்கு வெளியாதல் காண்க. "பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்" என்று கடைச்சங்கப்புலவர்கட்குத் தமது திருத்தொண்டத்தொகையில் வணக்கங்கூறிப்போந்த சுந்தரமூர்த்திசுவாமிகள் அச்சங்ககாலத்திற்குப் பின்னரே விளங்கியவராதல் வேண்டும்.* அன்றியும், சுந்தரமூர்த்திசுவாமிகள், கி. பி. 9-ஆம்

* திருவனந்தபுரம் ஸ்ரீமான் K. G. சேஷையரவர்கள் B. A., B. L. தாம் எழுதியுள்ள "மாணிக்கவாசகர்காலம்" என்னு மாங்கிலநூலில், 'பொய்யடிமையில்லாதபுலவர்' என்னுஞ் சொற்றொடர் மாணிக்கவாசகசுவாமிகளையே குறிக்குமென்றும், நம்பியாண்டார் தமது திருத்தொண்டர்திருவந்தாதியிற் கூறியுள்ளபடி கடைச்சங்கப்புலவர்களைக்குறியாதென்றும் எழுதியிருக்கின்றனர். அதற்கு அவர்கள் கூறுங்காரணம் கடைச்சங்கத்தில் ஜைனர், பௌத்தர்முதலிய புறப்புறச்சமயிகளுமிருந்தமையால், அப்புலவர்கட்கு நம் சுந்தரமூர்த்திசுவாமிகள் வணக்கம் கூறியிருக்கமாட்டார்களென்பதே. இஃதுண்மையே. ஆனால் நக்கீரர், கபிலர், பரணர்முதலிய சிவாநுபூதிச்செல்வர்களும் அச்சங்கத்து வீற்றிருந்தமையால், அப்புலவர்களையே, "பொய்யடிமையில்லாதபுலவர்" என்று நம்சுவாமிகள் கூறியுள்ளதாகக்கோடற்குத் தடையென்னை? இங்ஙனங்கொள்ளாது, அச்சொற்றொடர் மாணிக்கவாசகப்பெருமானையே குறிக்குமெனக்கூறின், தொகையடியார் ஒன்பதின்மரென்னும் வழக்கொழிந்து எண்மரெனவும், தனியடியார் அறுபத்துமூவரென்னும் வழக்கொழிந்து அறுபத்துநால்வரெனவுங் கொள்ள வேண்டும். இது முன்னோர்கொள்கைக்கு முற்றிலும் முரணுகின்றது. இனி, நம்பியாண்டார், மணிவாசகப்பெருமானையும், அவர்களருளிய நூலினருமையையும் நன்கறிந்துள்ளாரென்பது,

> "வருவாசகத்தினின்முற்றுணர்ந்தோனைவண்டில்லைமன்னைத்
> திருவாதவூர்ச்சிவபாத்தியன்செய்திருச்சிற்றம்பலப்
> பொருளார்தருதிருக்கோவைகண்டேயுமற்றப்பொருளைத்
> தெருளாதவுள்ளத்தவர்கவிபாடிச்சிரிப்பிப்பரே."*

என்னுஞ் செய்யுளால் இனிதுவிளங்கும். "பொய்யடிமையில்லாதபுலவர்" என்னுஞ் சொற்றொடர் மாணிக்கவாசகரைக்குறிக்குமாயின், அப்பெருமானை நன்கறிந்துள்ள நம்பியாண்டார் தமது திருவந்தாதியில், அங்ஙனங்கூறிச்செல்லலாம்; அவர் அங்ஙனங்கூறாமையின், அச்சொற்றொடர் அப்பெரியாரையே குறிக்குமென்றுரைத்தல் சிறிதும் பொருத்தமுடைத்தன்று. அன்றியும் சுந்தரமூர்த்திகட்கு மிகச் சமீபகாலத்துவிளங்கிய நம்பியாண்டார்காலத்து அச்சொற்றொடர் சங்கப்புலவர்களைக்குறித்து வழங்கிவந்தமையால், அப்பெரியார் தமது திருவந்தாதியில் அங்ஙனங்கூறினாரென்க. ஆகவே, நம்மையரவர்கள் கூற்றுச் சிறிதும் பொருந்தாதென்க.

* (கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் 58.)

நூற்றாண்டினிடையில் விளங்கியவராதல் வேண்டுமென்று ஸ்ரீமான் T. A. கோபிநாதராயரவர்கள், M.A. செந்தமிழ் 3-ஆம்தொகுதி 9-ஆம் பகுதியில் நிரூபணஞ்செய்துள்ளனர். கடைச்சங்கம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்கு முந்தியகாலங்களிலும் நின்று நிலவியதாக வின், சுந்தரமூர்த்திசுவாமிகள் கடைச்சங்ககாலத்திற்குப் பன்னூற் றாண்டுகட்குப்பின்னரே விளங்கியவராகற்பாலர். இனி, சுந்தரமூர்த்தி சுவாமிகள்காலத்தினராய சேரமான்பெருமாணயனார்க்கு ஆலவாயுறை யிறைவன் திருமுகமனுப்பியருளியசெய்தியைத் தம்நூலிற் குறித்துப் போந்த கல்லாடனாரும் கடைச்சங்ககாலத்திற்குப் பலநூற்றாண்டுகட் குப்பின்னரே இத்தமிழகத்தில் வாழ்ந்தவராவரென்பது இனிதுவிளங் கும்.

இதுகாறுங்கூறியவற்றால், கல்லாடமுடையார் சங்கப்புலவர் நாற் பத்தொன்பதின்மருள் ஒருவராய கல்லாடனாரல்லரென்பதும் கி. பி. 9-ஆம் நூற்றாண்டிற்குப்பின்னரே கல்லாடரென்னும் பெயர்பூண்டு விளங்கிய வேறொருபுலவரேயாமென்பதும் புலப்படுதல் காண்க.

இனி, நச்சினார்க்கினியர், பேராசிரியர், அடியார்க்குநல்லார், பரி மேலழகர்முதலிய தொல்லுரையாசிரியர் பலரானும் அன்னோர் உரைக ளில், இக்கல்லாடச் செய்யுட்கள் எடுத்தாளப்படவில்லையாகவின், இந் நூலுடையார் மேற்கூறிய உரையாசிரியர்களின்காலத்திற்குப் பிற்பட் டவரென்றுகூறல் சாலப்பொருந்துமென்க. இவர்களுள், பேராசிரிய ரும் அடியார்க்குநல்லாரும் நச்சினார்க்கினியருக்கு முந்தியவர்களென் பது சரித்திரவாராய்ச்சிசெய்யும் அறிஞர் பலரும் அறிந்தவிஷயம். நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் கி.பி. பதின்மூன்றாம்நூற்றாண்டில் வாழ்ந்தவர்களாதலின், நம்மாசிரியரும் கி. பி. 13-ஆம்நூற்றாண்டிற்குப் பின்னரே இத்தமிழகத்தில் விளங்கியவராதல்வேண்டும்.

இனிக் "கல்லாடத்துக்கலந்தினிதருளி" யென்னுந் திருவாசகச் செய்யுளடியால், கல்லாடமென்னுந்திருப்பதி யொன்றுளதென்று

தெரிகிறது. கடைச்சங்கப்புலவராய கல்லாடனாரும் கல்லாடமியற்றிய விரண்டாங்கல்லாடனாரும் அத்திருப்பதியிற்றோன்றியவர்களாயிருத்த லுங் கூடும். கல்லாடமுடையார் குமாரதெய்வத்தை வழிபடுகடவுளாகக்கொண்டவரென்பதும், மதுரையைச்சார்ந்த திருப்பரங்குன்றத் திடத்து மிக்க அன்புடையவரென்பதும், இந்நூலாராய்வார்க்கு இனிது புலனாம்.

இனி, இக்கல்லாடமியற்றப்பெற்றகாலத்திற்குப் பன்னூற்றாண்டு கட்குப்பினனர்விளங்கிய ஒருபுலவர் இந்நூலின் சொற்செறிவும் பொருளாழமுங்கண்டு வியந்து, இதனையியற்றியவர் கடைச்சங்கப்புலவராய கல்லாடனாரேயென்றெண்ணி, முற்குறித்துள்ள சிறப்புப்பாயிரச்செய் யுட்களையியற்றி, இந்நூலோடுசேர்த்தெழுதிவைத்தனராதல்வேண்டும். இதனால், கல்லாடனார் இருவரிருந்தனரென்னும் உண்மை தெரியாத காலத்து, இந்நூற்குச் சிறப்புப்பாயிரச்செய்யுட்க ளியற்றப்பெற்றன வென்பது நன்கு வெளியாகிறது.

இதுகாறுங்கூறியவாற்றால், கல்லாடரென்னும் பெயர்பூண்ட புலவர்கள் இருவரிருந்துள்ளார்களென்பதும், அவர்களுள் இரண்டாங் கல்லாடனாரே 'கல்லாட'மென்ற நூலியற்றியவரென்பதும், இவர் கி. பி. 13-ஆம் நூற்றாண்டிற்குப்பின்னரே இத்தமிழகத்தில் வாழ்ந்தவராவரென்பதும் பிறவும் நன்குவிளங்கிநிற்றல் காண்க.

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,

திருப்புறம்பயம்.

# இரசாயனமும் ஐரோப்பிய யுத்தமும்.

இரசாயனம் என்பது என்ன? அது, பொதுவாய் நமக்குத் தெரிகின்ற ஜீவன் உள்ளனவும் ஜீவன் இல்லாதனவுமாகிய எல்லாப் பொருள்களையும் எடுத்து, அவைகளின் குணங்களென்ன? அவைகளின் உள்ளமைப்பு எத்தன்மைத்து? அவைகள் மற்றப்பொருள்களுடன் கலக்கும்பொழுது என்னவிதமான மாறுதல்கள் அடைகின்றன? அவைகளை என்னமாதிரியாக உபயோகப்படுத்தலாம் என்று இம்மாதிரியான விஷயங்களை ஆராய்வதே. எப்படி வானசாஸ்திரத்திற்குச் சோதிடசாஸ்திரம் அடிப்படையாயிருந்ததோ; அதேமாதிரி இரசாயனசாஸ்திரத்திற்கு இரசவாதம் அடிப்படையாயிருந்தது. இரசவாதிகள் இரும்பு முதலிய இழிந்தலோகங்களைப் பொன்முதலிய உயரியவைகளாக்குவதையும், மூப்பில்லாமல் என்றும் இளமைப்பருவமாகவே இருக்கச் செய்யக்கூடிய சஞ்சீவிமாத்திரையைக் கண்டுபிடிப்பதையும், தங்கள் முக்கிய நோக்கங்களாகக்கொண்டு, அவைகளிற் பல அரசர்கள், சக்கரவர்த்திகள், மடாதிபதிகள், பிரபுக்கள் முதலியவர்களாற் பணவுதவி பெற்றுத் தங்கள் வாழ்நாளையெல்லாம் கழித்துவந்தார்கள். கடைசியாக அவர்கள் நோக்கங்கள் கைகூடவில்லை. இப்பொழுதும் நம் நாட்டில், சிலர் சில பச்சிலைச்சாற்றின் உதவியால் மாட்டு இலாடம்முதலிய இரும்புச்சாமான்களை ஒருநொடியில் தங்கமாக்கிவிடலாம் என்று நம்புகிறார்கள். ஏதோ சிலர் அம்மாதிரி செய்கிறார்களென்றும் கேள்வி. நான் இதுவரையும் பார்த்ததுகிடையாது. தங்கள் நோக்கம் அவ்விஷயத்தில் தவறிப்போயினும், அவர்கள் ஆராய்ச்சியிற் பல பொருள்களின் குணாதிசயங்களையும், அவைகளுள் ஒன்றற்கொன்றுள்ள சம்பந்தங்களையும், அவைகளால் மனிதர்களுக்குள்ள உபயோகங்களையும், கண்டறிந்தார்கள். இப்படி அவர்கள் கண்டறிந்தமுறையே இப்பொழுதைய இரசாயனசாஸ்திரமாகின்றது.

இவ்விரசாயனம் கேவலசாஸ்திரமாத்திரமாயிருக்காமல், பல தொழில்களுக்கும் வியாபாரவர்த்தகங்களுக்கும் தக்கதுணைக்கருவியாயிருக்கின்றது. இன்றைக்குக் கேவலம் சாஸ்திரவிஷயமாயிருப்பது,

னை நம்வாழ்க்கை முறையையே மாற்றவல்லதாகிய ஒருபெருங் கைத்தொழிலுக்காவது அல்லது எதிர்பாராமற் புதிய திரவியங்களைச்சேர்க்கும் முயற்சிக்காவது காரணமாகின்றது. விவசாயத்திற்கும் ஒருபெரிய உபகாரமாயுள்ளது இது. இன்னும் டாக்டர்களுக்குவேண்டிய மருந்துப்பொருளைச் சுத்தமாகக் கொடுக்கவல்லவர்கள் இரசாயனசாஸ்திரிகளே. பெரியபட்டினங்களில் விற்பனைக்குவரும் பால், வெண்ணெய், தண்ணீர்முதலியபொருள்கள் சரியானநிலைமையில் இருக்கின்றனவாவென்றும் கலப்பில்லாமல் இருக்கின்றனவா என்றும்பார்க்குந்தகுதியையுடையவர்கள் இவ்விரசாயனசாஸ்திரத்தைக்கற்றவர்களேயாவர். தொழிலாளிகளுக்கும், வர்த்தகர்களுக்கும், வார்னிஷ், சோப், ரப்பர், மை, எண்ணெய், ஸிமெண்டு முதலியபொருள்கள் கலப்பற்றிருக்கின்றனவா என்று பார்க்கக்கூடியவர்களும் இவர்களேயாவர். படித்தறிந்த இரசாயனசாஸ்திரிகள் "தற்கால உலகவாழ்வில் தங்கள் கைப்படாத பொருள்கள் வரமுடியா"தென்று ஓங்கி அறைகின்றனர். இயற்கையில் வராத எந்த வஸ்துவை வேண்டுமாயினும் எடுத்துப்பார்த்தால், அதில் இரசாயனசாஸ்திரி சம்பந்தப்பட்டிருக்கும்விதத்தை எடுத்துரைக்க முடியும்.

இவ்விரசாயனவறிவு, இயற்கையறிவு பலவற்றில் ஒன்றேயாகும். இயற்கையில் அமைந்துள்ளவைகளையெல்லாம் அறிதலே தற்கால சாஸ்திரஞானமாம். இது பௌதிகநூல், இரசாயனநூல், தாவரநூல், உயிர்நூல் எனப் பலவகைப்படும். தற்காலப்போக்கை உத்தேசித்தால், இம்மாதிரியான சாஸ்திரங்களில் தக்கதேர்ச்சியில்லாமலிருக்கும் மனிதனும் தேசமும் சமூகமும் பின்னடைந்து, பிறகு சின்னபின்னமாய் இருந்த இடங்கூடத்தெரியாமலே அழிந்துபோவார்கள் என்று தோன்றுகிறது. இதை உத்தேசித்தே பலதேசத்திலும் முன்னும் இப்பொழுதும் இச்சாஸ்திர அபிவிருத்திவிஷயங்களில் ஏராளமானபணம் செலவிட்டுத் தங்கள்தங்கள் வன்மைகளை அதிகப்படுத்திக்கொண்டுவருகிறார்கள். இதில் எவ்வளவுதூரம் உன்னதஸ்திதியை அடைகிறார்களோ, அதற்குத்தகுந்தபடி அவர்கள் புதுநாகரிகமேம்பாடு அடைந்தவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இப்படி மிக்க நாகரிக உயர்ச்சியை அடைந்திருந்தவர்கள் ஐரோப்பியக்கண்டத்து வல்லரசுகளும் அமெரிக்காக்கண்டத்து ஐக்கியமாகாணத்துள்ளோருமென்பர்.

சென்ற பத்துவருஷங்களுக்குமுன் ரஷியாவுக்கும் ஜப்பானுக்கும் நடந்தசண்டையின்பயனுய்க் கீழ்த்திசை ஜப்பானும் ஒரு உயரிய நாடென்றும் மிக்க நாகரிகம்படைத்துள்ளதென்றும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மேற்சொன்ன இராஜ்ய ஜனங்களெல்லாரும் வெளித்தோற்றத்தில் வெறுப்புக்காட்டாதவர்களாய் உள்ளே வைரம்பாய்ந்தவர்களாய், மனத்தில் ஒன்றிருக்க உதட்டில் வேறொன்றைக் காட்டுபவர்களாய், தத்தங்காரியங்களில் மிக்கமுயற்சியுடையவர்களாய் விளங்கிவந்தார்கள். ஆனால், உள்ளுள்ளதை எத்தனைநாள் அடக்கிவைப்பது சாத்தியமாகும்? படீர் என்று வெடித்தது! பகீர் என்று பற்றிக்கொண்டு ஐரோப்பிய பூமி முழுதும் எரியும் ஜுவாலை இன்னும் அழிந்தபாடில்லை. இதற்கு முக்கியகாரணங்கள் பல ஆண்டுகளாக ஜெர்மனி தேசத்துச் சக்ரவர்த்தியும் பிரஜைகளும் சேர்த்துவந்த செல்வச் செருக்கும், அடைந்த தொழிற்றிறனும், கூட்டின வியாபாரக்கொழுப்பும், பயிற்றிவந்தபோதனுமுறைவன்மையும், கைக்கொண்ட நிலம், நீர், ஆகாயம் இவைகளில் வல்லமையுற்றபடைச்சீர்மையுமே. நெடுங்காலமாக இங்கிலீஷ்க்காரர் சமுத்திரச்சண்டையில் வல்லவரென்றும் பிரஞ்சுக்காரர் தரைப்போரில் திறனுடையவரென்றும், ஜெர்மானியர் மேகத்தை ஆண்டுவருகிறவர்களென்றும் அதாவது தத்துவவிசாரணை செய்யச் சாமர்த்தியமுடையவர்களென்றும் சொல்லிவந்தார்கள். ஆனால், அது இப்பொழுது முழுதும் மாறிவிட்டது. கடைசியாகச் சொன்ன ஜெர்மானியாரின் முற்போக்கே இப்பொழுது நடக்கிற சண்டைக்குக் காரணமாகும்.

முற்காலங்களிற் சண்டை நடக்கவில்லையா? இப்பொழுது நடக்குஞ் சண்டையில் என்னவிசேஷம்? ஆதிகாலத்தில் பாரதயுத்தம் பதினெட்டுநாள் யுத்தம் என்றும், இராம இராவணயுத்தம் பலவாரங்களாய் நடந்த யுத்தம் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். இன்னும், முற்காலங்களில் 1338-ம் வருஷமுதல் 1453-ம் வருஷம்வரையில் ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் இடைவிடாத சச்சரவும் சண்டைகளும் நடந்தேறின. பின்னர் 1756-ம் வருஷமுதல் 1783 வருஷம்வரையில் ஆங்கிலேயர்களும் ஜெர்மானியர்களும் ஆகிய ஒரு கக்ஷியாருக்கும் ஆஸ்டிரியர்களும், பிரஞ்சுக்காரர்களும், ருஷியர்களும்

ஆகிய மற்றொருகக்ஷியாருக்கும் பிரமாதமானயுத்தம்நடந்தது. பின்னர் மகாசூரனான நெப்போலியதீரன் 1797-ம்வருஷம் முதல் 1815-ம் வருஷம் ஜூன்மீ 18உ வரையில் ஐரோப்பாக்கண்டத்தை ஒருகலக்குக் கலக்கி, அரிய ஓர் இராஜ்யத்தைநிலைநிறுத்திக் கடைசியில் ஆங்கிலேய ரும் பிரஷியர்களும் சேர்த்துவந்தசேனைக்கு உத்தரவாதம்பண்ண முடியாதவனாய், பெட்டியிலடங்கின பாம்பைப்போல் ஒருதீவில் தன் வாணாட்களைக்கழித்தான். பின்னர் 1854-56-ம்வருஷங்களில் கிரிமி யின் யுத்தமும் 1870-871-ம்வருஷங்களில் பிராங்கோ ஜெர்மன்யுத்த மும் நடந்தன. ஐரோப்பியச் சரித்திரங்களிற்கண்ட இவைகளேயன்றி, நம்வாழ்நாளில் பலவகையாகக் கேட்டறிந்து கொண்ட 1899-1902 வருஷங்களில் நடந்த போவர்யுத்தமும், 1904-1905 வருஷங்களில் நடந்த ரஷியஜப்பான்யுத்தமும், பால்கன்யுத்தம் முதலியனவும் மிகச் சிறப்பித்துச்சொல்லப்படுகின்றன. ஆயினும், இப்பொழுது நடக்கிற இந்தயுத்தத்தில் செலவழியும்பொருளுக்கும், போர்க்களத்து விஸ்தீ ரணத்தின் அளவுக்கும், யுத்தத்தளவாடங்களைச் செய்வதில் உபயோ கிக்குஞ்சிரமம், மூளைக்கொதிப்பு முதலியவைகளின் வரையறைக்கும் வேறு ஒன்றும் நிகராகாது.

நன்று, இத்தன்மையான கடும்போர்களினால் இரசாயனத்திற்கு வந்தகேடு என்ன அல்லது நன்மை என்ன? கனவான்களே, முந்திய யுத்தங்கள் எப்படியாயிருந்தபோதிலும் இப்பொழுதையயுத்தம் "இர சாயனயுத்தமே" என்று பல அறிஞர்கள் பறையடிக்கின்றார்கள். அத னுடைய தாற்பரியத்தைச் சிறிது கூறுகிறேன்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தீவிரமாய்ச் சண்டைசெய்த நெப் போலியவீரன், தன் மாற்றார்கள் பல சாமான்களைத் தன்னாட்டுக்கு வந்து சேரமுடியாதபடி செய்யவே தன் நாட்டிலுள்ள இரசாயனசாஸ் திர அறிஞர்களுக்கு ஓர்விண்ணப்பம் செய்வித்தான். அது பின்வரு மாறு "நம் நாட்டுக்கண்ணாடி" சோப் முதலிய கைத்தொழிலுக்கு முக்கியமாய் வேண்டியசிலபொருள்கள் அருமையாய்விட்டன. அவை களில் ஒன்று சோடாவுப்பு. இதனைத் தாராளமாய் நம் நாட்டிலேயே இலகுவாயும் சரசமாயும் செய்யக்கூடியவழியைக் கண்டுபிடிப்பவர்க ளுக்குப் பன்னிரண்டாயிரம் பவுன் பரிசுகொடுக்கப்படும் என்று கட் டளையிட்டனன். பரிசுபெறும் ஆசையுடன் பலர் இத்தொழிலிற்

பிரவர்த்தித்தார்கள். அவர்களில் "லிபிளான்க்" துரைவழி நன்றாயிருந்தது. இதைத் தங்கள் நாட்டுப் பொதுஜன உபயோகத்துக்கு அவர்கள் உபயோகித்துக்கொண்டார்களேனும், லிபிளான்க் துரைக்குப் பரிசு கொடுக்கப்படவில்லை. சண்டை முறுகி நடந்தபொழுது பணத்தட்டடைந்து தத்தளித்த காலத்தில், தனக்கு ஒருவரும் உதவுகிறவர் இல்லாதவராய் அத்துரை தன்னுயிரை, கேட்டோர் பரிதபிக்கும்வண்ணம் மாய்த்துக்கொண்டனர். ஆனால், அவர் ஏற்படுத்திய அஸ்திவாரத்தின் மேல் சோடாவுப்புத் தொழில் அதிகமாக ஏற்பட்டுக் கோடிக்கணக்கான ஜனங்கள் பிழைத்தற்குப் பலசௌளகரியங்கள் ஏற்பட்டன. இம் மகா உபகாரம் நெருக்கடியான ஒரு யுத்தசமயத்தில் ஒருவருக்குச்செய்யப் பாக்கியங்கிடைத்தது.

இப்பொழுது நடக்கிற யுத்தத்தினால் இரசாயனசாஸ்திரிகளுக்கு மூச்சுவிடமுடியாத வேலைகிடைத்துவிட்டது. யுத்த தளவாடங்களுக்கென்றே ஒருமந்திரியை ஏற்படுத்துங் காலமாய்விட்டது. வாக்கில் வல்ல மந்திரிகள் சாஸ்திரங்களின் அவசியத்தை உணர்ந்து, "இதுவரையும் சும்மாயிருந்துவிட்டோமே" என்று ஏங்குதற்கேதுவாயது இந்த யுத்தம். இங்கிலாண்டிலுள்ள பல சாஸ்திரஞானிகளும் ஒன்றுசேர்ந்து "சர்க்காரைக்கண்டு ஆசிரயித்து" இதுவரையும் கண்மூடியாயிருந்த தன்மையை நீக்கி, இனிமேலாவது நம் வாழ்விற்கு இன்றியமையாத தானவழிகளைக்காட்டும் சாஸ்திரங்களை அபிவிருத்திசெய்யுங்கள்; அதற்குவேண்டிய பண உதவிகளைக்கொடுக்கப் பின்வாங்காதீர்கள். என்று பலவாறு முறையிட்டுக்கொண்டிருக்கின்றனர். சண்டை மும்முரத்தினால் பகையரசர் நாடுகளினின்றும் இதுவரையுங்கிடைத்த சாமான்கள் வரமுடியாதுபோகவே, ஒவ்வொரு தேசத்தாரும் தங்கள் தங்கள் நாடுகளில் விளைவனவும், வெட்டி எடுக்கக்கூடியனவுமான வஸ்துக்களை மிகுதியாகச்சேகரித்து அவசியமான தொழில்களுக்கு உபயோகித்துக்கொள்ள முயற்சிசெய்கிறார்கள். அப்படியுள்ளவைகளில் இரசாயன சம்பந்தமுள்ளவைகள் அநேகம். அவைகளிற் சிலவற்றைப் பற்றி ஈண்டுச் சொல்லுகிறேன்.

முதலாவது நீலம் என்ற வஸ்துவை எடுத்துக்கொள்ளுகிறேன். இது இங்கிலீஷில் இண்டிகோ எனப்பெயர்பெறும். இந்தத் திவ்ய நிறம் கொடுக்கும்வஸ்து, இந்தியாவில் மிகுதியாகப் பயிராக்கப்படுகின்ற

ஒருசெடியினின்றும் எடுக்கப்படுகின்றது. 1895-ம்வருஷத்தில் 35 லக்ஷத்து 70 ஆயிரம் பவுன் விலைமதிப்புள்ள நீலச்சாயம் நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டது. ஆனால், பதினைந்துவருஷத்திற்குள் அதாவது 1910-ல் இச்சரக்கின் ஏற்றுமதி 2 லக்ஷத்து 34 ஆயிரம் பவுனுக்கு இறங்கிவிட்டது. சண்டை ஆரம்பமாகுமுன் 5, 6 கண்டங்களிலுஞ் செலவழிகிற நீலச்சாயத்தின் ஐந்தின் நாலுபங்கு செயற்கைப்பொருளாய் ஜெர்மனிதேசத்திற் செய்யப்பட்டு மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டது. ஆகவே, இயற்கைப்பொருளாய், பூமியில் விளைவதாய், பல இந்தியர்களுக்கு ஜீவனம் கொடுத்துக்கொண்டிருந்த நீலஅவுரி நசித்துப்போய்விட்டது. இந்த ஜெர்மானிய இரசாயனசாஸ்திரிகள் செய்வதென்னவென்றால், எல்லா இயற்கைப்பொருளையும் பூட்டுப்பூட்டாய்ப் பிரித்துப்பார்த்து அவைகளின்உள்ளமைப்பையும் குணகுணங்களையும் நன்குபரிசீலனம்பண்ணிப் பின் இயற்கையின் உதவியின்றி அவைகளைத் தங்கள் சோதனைச் சாலைகளிற் செயற்கைவழியில் மிகுதியாக அடையும்விதத்தைக் கைக்கொள்வதே. இப்படிச்செய்வதில் சரக்கு இலகுவாகவும் சரசமாகவும் மிகுதியாகவுங் கிடைக்கின்றது. ஆகவே நாளடைவில் இயற்கைப்பொருள் மறைய, செயற்கைப்பொருள் உலாவுகின்றது. நீலத்தைச் செயற்கைவழியில் செய்யும்விதத்தை ஜெர்மானியர்கள் இலகுவிற் கண்டுபிடிக்கவில்லை. மிகக்கஷ்டப்பட்டு, ஒன்றரைக்கோடிரூபா செலவிட்டு, கடைசியில் ஜெயத்தை அடைந்தார்கள். இப்படியாகச்செய்து, செயற்கைப்பொருளை எல்லாநாட்டிலும் நாட்டிவிட்டார்கள். சண்டை ஆரம்பித்ததும் சாயச்சரக்கு வரத்துநின்றுவிட்டது. இந்தியா முதலிய பலதேசங்களிலும் சாயப்பஞ்சம் வந்துவிட்டது. இங்கிலாண்டுதேசத்தில் வருஷத்தில் மூன்றுகோடி ரூபாபெறுமான சாயம் உபயோகமாகி வந்தது. அதில் $2\frac{3}{4}$ கோடிரூபா சாயம் ஜெர்மானியிலிருந்து வந்துகொண்டிருந்தது. ஆகவே எல்லா ஜனங்களும் தங்கள் "சாயம் வெளுத்துப்போய்விட்ட"தைக் குறித்துத்தபித்து, அரசனைநம்பிப்புருஷனைக் கைவிட்டவளின்கதியை அடைந்தவர்களாய்ப் "பழையகுருடி"யின்பாதத்தில்விழ ஆரம்பித்திருக்கிறார்கள். இதனால் முன் பிரபலமாயிருந்த அவுரிச்செடி பழையபடியும் சாகுபடிசெய்யப்பட்டு இந்தியரின் செலவுப்பெருக்கை அதிகரிக்கச்செய்யுமென்றும் உணர்ச்சியுண்டாயிருக்கிறது. சமீபத்தில், ஜலமட்டத்திற்குக் கீழாகவே, சீரைக்கிழித்து

கடைசியாக, வயலுரத்தை எடுத்துக்கொள்வோம். அமெரிக்கா கண்டத்தில் "சிலி" தேசத்தில் இவ்வுரம் மிகுதியாக உண்டு. அது ஜெர்மனிதேசத்திற்குள் போவது நின்றுவிட்டது. ஆகவே அவர்கள் உரமின்றித் தவிக்கிறார்களோ என்றுகேட்டால், அப்படியில்லை; நைட்ர ஜன்வாயு சம்பந்தமான பொருளே உரத்துக்குவேண்டும். அப்பொருள் "சிலி"தேசத்தில் மிகுதியாக உண்டு. அது கிடைக்காமற்போகவே, ஜெர்மனியர்கள் எங்கும் வியாபித்ததாய், மனிதர்கண்ணுக்குத் தட்டுப் படாததாய், அசையும் தன்மையதாய் விளங்கும் ஆகாயத்தில் நிறைந்த வாயுவிலிருக்கிற நைட்ரஜன் ஆக்ஸிஜன் இவைகளை, மின்சாரசக்தியின் உதவிகொண்டு செயற்கைப்பொருளாய்மாற்றி, வேண்டுமட்டும் தங்கள் பயிர்முதலியவைகளுக்கு உபயோகித்து, தங்கள் அறுவடையை இரட்டித்துக்கொண்டுவருகிறார்கள். ஆங்கில இரசாயன சாஸ்திரி ஒருவர் "அவர்களுக்கு இருக்கிற வாயுமண்டலமே நம்மிடமுமிருக்கின்றது. வாயுவின் அமைப்பும் ஒன்றுபோலவேயுளது. அப்படியிருக்க, நமக்கும் சிலியிலிருந்து உரம் நின்றுபோக, ஜெர்மானியர்களைப்போல் அதே ஆகாயத்தினின்றும் வேண்டிய வஸ்துக்களை நாம் ஏன் அடையக் கூடாது" என்று கேட்கிறார்.

இன்னும் ஜெர்மானியர்களுக்கு வேண்டுமளவு தங்கள் நாட்டில் ரப்பர் கிடையாது. அந்நியநாட்டிலிருந்து வாங்கிவந்தார்கள். யுத்தம் அதன் வரவைத் தடைப்படுத்தவே, அங்கேயுள்ளவர்கள் தங்கள் நாட்டிற் கிடைக்கக்கூடிய வஸ்துக்களினின்றும் அதைச்சேர்க்கும் உபாயத்தைக் கண்டுபிடிப்பதில் தீரர்களாய்நின்று, இப்பொழுது வேண்டிய அளவு ரப்பரை, செயற்கைப்பொருளாகவே செய்துகொள்ளுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

கடைசியாக, நாசப்படுத்தக்கூடிய இரசாயனக்காற்றுக்களையும் திரவங்களையும் கணக்கில்லாமல் உண்டாக்கி வருகிறார்கள். இத்துடன் குண்டுபட்டுக் காயப்பட்டவர்களுக்கும், மற்ற வியாதியஸ்தர்களுக்கும் உபயோகப்படக்கூடியதான பலப்பல வஸ்துக்களையும் இரசாயனசாஸ்திரிகள் செய்துகொடுக்கிறார்கள். ஆகவே கூரிய கத்திபோலிருக்கும் இவ்விரசாயன அறிவை மனிதனுக்குத் துன்பம் நிகழ்த்துவதற்கும் மனிதனுடைய துன்பத்தைப் போக்குவதற்கும் உபயோகிக்கச் சாத்தியமாகும் என்பது வெள்ளிடைவிலங்கலாமெனக.

இம்மாதிரி இரசாயனத்தின் இருவகை உபயோகத்தையும் கண்டறிந்து அதை விருத்திசெய்து மேன்மைப்படுத்தியவர் ஜெர்மானியராவர். இதையே அவர்கள் முற்போக்கென்பர். சிலர் உயிரைத்தொலைப்பதற்கு வேண்டியவழிகளை எம்மட்டும் அவர்கள் கையாண்டுள்ளார்கள் என்பது நம்மவர்களெல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. இத்துடன் நிற்காமல் அவர்கள் உயிர்கள்சீவிக்க வேண்டியவழிகளை "கருமமேகண்ணயினராய்" செய்துவருகிறார்கள். உதாரணமாக "Sleeping sickness" முதலிய வியாதிகள் பல்லுயிர்களைக் கொள்ளைகொள்கின்றன. இதன் மூலத்தையும் சொரூபத்தையும் சோதனைபண்ணின டாக்டர் "எல்ரிக்" என்புவர் இடைவிடாது,

"தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு"

என்ற குறள்வாக்கிற்கிணங்க, தன் இன்பம் விழையானாய், தன் வினையையே விழைவானாய், தன் இனத்தவர்க்குறுந் துன்பந்துடைக்குந் தூணாய்ப் பன்னாண்முயன்று, 'முயற்சி திருவினையாக்கும்' என்பதன் அறிகுறியாய், அவ்வொட்டு வியாதியின் விஷமாற்றத்தைக் கண்டுபிடித்தார். இதற்கு அனுகூலமாயிருந்தது அவரது இரசாயன அறிவு. இவ்வியாதியானது முண்முனையிற் கோடிக்கணக்காய் வசிக்கக்கூடிய சிற்றுயிரால் விளைவது. அம்மாதிரியான சிற்றுயிர்களைச்சேர்த்து ஆராய்ந்து, அவைகளுக்குத்தக்க விஷமாயும், அவைகள் வசிக்கும் உடலையுடையவர்களுக்கு விஷமல்லாததாயும் உள்ள ஒரு மருந்தைக் கண்டுபிடித்தார். இதைக் கண்டுபிடிப்பதில் அவர் 605 முறைதவறித் தவறிப்புத்திமயங்கினார். ஒன்றிலும் பின்வாங்காதவராய் மகமத்கோரி, ராபர்ட்புரூஸ், கஜ்னிமகம்மது இவர்களைக்காட்டிலும் விடாமுயற்சியுடையராய் அறுநூற்றாறுவதுமுறை தன் மனத்திற்கிசைந்த பொருளைக்கண்டார். அதையே இன்றளவும் "606 நிர். மருந்து" என்றும் "சால்வர்சன்" என்றும் வைத்தியர்குழாத்தில் வழங்குகிறார்கள்.* இன்னும் வியாதியாளர்களுக்காக "சானடஜன்" முதலிய எத்தனையோ பொருள்களைத் தேடிவைத்திருக்கின்றனர்.

---

* இதன் இரசாயனப்பெயர். Di-hydroxydiamino-arseno-Benzare என்பது.

இம்மாதிரியான சாஸ்திரப்பயிற்சிமேன்மைஜெர்மனிக்கேஉரித்து. சென்ற மார்ச்சுமாதத்தில் லண்டன்மாநகரில் இரசாயனசங்கத்தார் ஆதரவின்கீழ்க்கூடிய ஒரு மகாகூட்டத்தில், அன்று தலைமைவகித்த "அலக்சாண்டர் ஸ்காட்" என்ற பிரமுகர் தன் பிரசங்கத்தில் பின்வருமாறு சொல்லுகிறார். If the chemical manufacturer and those engaged in the allied industries are not only to hold their own but to save themselves from an extinction as certain as the death of every living organism, there is only one remedy and that is to call in the services of the man who has been trained in the methods of advancing knowledge and whose education has been based on a sound acquanitance of the fundamental facts and theories of modern science. To keep along the same dead level of a fair measure of success is an existence which can only satisfy a decadent race and can only last for a very limited time. Our race has again shown itself in this war to be as full of energy, bravery and chivalry as of old, but it is only gradually learning how much the neglect of research and the want of appreciation of a scientific training and education has cost it. Even our law-givers and law-makers are having the importance of scientific knowledge and training forced upon them and perhaps no branch of science has had its utility more strikingly demonstrated for the time being than our own. But it has required hundreds of thousands of tons of T. N. T., Lyodite and dynamite to shake the foundations of their ignorance. When those of our defenders at the front who have escaped the scientifically organised

atrocities of our enemies and the consequences of the scientific ignorance of our rulers return home again, we may venture to hope for the dawn of a new era in chemistry with perhaps brighter prospects of success than Boyle had two hundred years ago." இந்த மகாயுத்தத்தினால் ஒவ்வொரு தேசத்திலுமுள்ள போதனாமுறை, கல்விச்செருக்கு, சாஸ்திராபிவிருத்தி, தொழில்மேன்மை, பண்டமாற்றுதல், வர்த்தகச்செழிப்பு, வியாபாரச்செறிவு, ஜனங்களின்கூட்டுறவு, உத்யோகக்கட்டு முதலியன நன்றாய் விளங்குகின்றன.

மேலே இங்கிலாந்தைப்பற்றிச் சொன்னவையெல்லாம் மற்றத் தேசங்களுக்கும் ஒக்கும். ஆயினும் நம் தேசமாகிய இந்தியாவிற்கு மிகப் பொருந்தும். இதை ஒட்டியே இப்பொழுது நம் நாட்டில் சில நாட்களாக "இண்டஸ்டிரியல்கமிஷன்" ஒன்று ஏற்பட்டு, நகரங்கடோறுஞ்சென்று, தொழிற்றலைவர்களையும் சாஸ்திரஞானிகளையும் தீரவிசாரித்து, பொருளாதாரப்பெருக்கை நிரூபிக்க முயன்றுவருகிறார்கள். எல்லா இடங்களிலும் ஜனங்களும் சர்க்காரும் அளவளாவி மனமொருமித்துத் தங்கள் குறைகளைத்தீர்க்க ஆரம்பித்திருக்கின்றனர். "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்ற வாக்கியம் நிலைபெறாமலிருக்கவேண்டுமென்பதைப் பல நேசதேசத்தார்களும் கவனித்து முயன்றுவருகிறார்கள். இதுவே அவர்கள் முதல்நோக்கம். இதன்மூலமாய் அறிவினையூட்டும் சாஸ்திரங்களுக்கும் பக்கப்பலன் உண்டாகியிருக்கிறது. அவைகளில் ஒன்றாகிய இரசாயனமும் நன்கு வளர்க்கப்பட்டுவருகிறது. தீமையின்வழியும் நன்மை பிறக்குமன்றோ!

K. C. Viraraghavan.

---

உ

# ஓசனை நாற்காதமே.

சென்ற ஐப்பசிமாதச் சஞ்சிகையிலே தஞ்சை ஸ்ரீமத்-T. S. குப்புசாமிசாஸ்திரிகள் ஓசனையைப்பற்றியெழுதிய குறிப்பும், அதனாற் றாங்கொண்ட தீர்மானத்தையுங் கண்ணுற்றேன்.

உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர்பெருமான் இதுகாறுந் தாங் கூறியவையெல்லாம் ஆதாரமில்லாது கூறக்காண்கிலம். ஒன்றனை மறுக்குமுன் அதற்குற்றவாதாரங்கள் ஏதாவது தமிழின்கண்ணே யுண்டாவென்று தமிழ்வல்லதக்கபண்டிதர்களைக் கேட்டுத் தனது நாட்டுவது முறையாகும். ஓசனையென்பது நாற்காதமேயென்பதைக் காட்டுதும்.

அணுத்தேர்த்துகள்பஞ்சிற் றாய்மயிரன்றி
மணற்கடுகுநெல்விரலென்றேற—வணுத்தொடங்கி
யெட்டோடுமன்னுவிரற்பன்னிரண்டாற்சாணாக்கி
லச்சாணிரண்டுமுழமாம்.

முழநான்குகோலக்கோலைஞ்ஞூறுகூப்பீ
டவைநான்கு காதத்தளவாம்—பழுதின்
றுளநிறைந்ததொல்லோருரைசெய்துணரி
னளவிறந்ததன்மைநிலையாம்.

என்ற ஆன்றோர்வாக்குப்படி காதம் என்பது ஆங்கில நீட்டலளவைக்கு 2 மைல் 2 பர்லாங்கு 120 அடி ஆகின்றது. இதனை விரிவாகச்சொல்ல

| | | | |
|---|---|---|---|
| அணு | 8 | தேர்த்துகள் | 1 |
| தேர்த்துகள் | 8 | பஞ்சிழை | 1 |
| பஞ்சிழை | 8 | மயிர் | 1 |
| மயிர் | 8 | மணல் | 1 |
| மணல் | 8 | கடுகு | 1 |
| கடுகு | 8 | நெல் | 1 |
| நெல் | 8 | விரல் | 1 |
| விரல் | 12 | சாண் | 1 அல்லது 9 அங்குலம் |
| சாண் | 2 | முழம் | 1 அல்லது அடி $1\frac{1}{2}$ |
| முழம் | 4 | கோல் | 1 அல்லது அடி 6 |
| கோல் | 500 | கூப்பீடு | 1 அல்லது 3000 அடி |
| கூப்பீடு | 4 | காதம் | 1 அல்லது 12000 அடி |

12000 அடிக்கு மைல் 1க்கு 5280 அடி ஆக 2 மைல்போகப்பாக்கி 2 பர்லாங்கும் 120 அடியுமாகும். யோசனையோ 9 மைல் சொச்சமே யாகுமெனக்காட்டினார்களாயினும்

கதிரெழுதுகளெண்மூன்றுகசாக்கிரகந்தானு
மிதுதொகையிருநான்குற்றதிலீக்கையவ்விலீக்கையெட்டா
லுதிதரும்யூகையன்னயூகையோடியவையென்ப
வதனிருநான்குகொண்டதங்குலத்தளவையாமே.

*அங்குலமறுநான்காகுமது†கரங்கரமோர்நான்கு
தங்குதறனுவென்றுகுந்தனுவிரண்டதுவோர்தண்ட
மிங்குறுதண்டமானவொராயிரங்குரோசத்தெல்லை
பங்கமில்குரோசநான்கோரியோசனைப்பாலதாமே.

என்பதானே கரம் $1\frac{1}{2}$ அடி $\times 4 = 6$ அடி 1 தனு. தனு 2 தண்டம். தண்டம் 1000 குரோசம், அதாவது 12000 அடி குரோசம். இக்குரோசமும் காதமும் சமத்துவமுடையதென்பது இக்கணக்கினால் ஏற்படுகிறது. இவ்வான்றோர்வாக்குகளையும் அக்காலவழக்கையுமொட்டியே நச்சினார்க்கினியர் ஓசனை நாற்காதமேனச் சிந்தாமணியில் இரண்டிடத்துங் கூறியது.

இனி முற்கூறிய இருவெண்பாக்களிலுள்ள அளவைமுழுவதும் சுத்தத்தமிழ். அவைகள் தமிழாது வழக்கேயாகுமென்பது இன்றும் கூப்பீடு காதங்கள் தமிழ்நாட்டின்கண்ணே வழக்கிலிருப்பது போதிய சான்றாம். யோசனையோ ஆரியவழக்குப்போலும். அங்குலமென்பது விரற்கடைதானென்பது சாஸ்திரிகள் அறிவார்களே.

இவ்வாறு ஆழ்ந்து ஆராய்ச்சிசெய்யாது தஞ்சை K. H. ஸ்கூல் சம்ஸ்கிருத "பண்டித சுப்பிரமணியசாஸ்திரிகள்" "காவதமென்பதனை உலகவழக்கப்படி..............250 மைலுக்குமேலில்லை" [செந்தமிழ் 14 தொகுதி பக்கம் 431-432] என்று வேண்டியனவெல்லாம் சாதித்துவிட்டார்கள். பஃறுளிக்கும் குமரிக்கும் இடையிலுள்ள 700 காததூரம் 1606 சொச்சமைலேயொழிய வேறுவெகுதூர மன்றென்பதும் அதற்குத்தெற்கும் நாடிருந்ததுண்மையென்பதும் பெறுவதாகும். இது வேறுவிஷயமாகையால் தனிப்பட எழுதப்படும்.

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்,
இலக்கணவிளக்கபரம்பரை.

---

* அங்குலம்=விரல்.
† கரம்=முழம்.

# தக்கம், தெற்கு; தக்கநாடு, தென்னாடு.

'தக்கம்' என்னும்சொல் (दक्ष) 'தக்ஷம்' என்னும் சொல்லினது தற்பவமென்பது எவருக்கும் உடன்பாடேயாகும். 'தக்ஷம்' என்பது தென்றிசையைக் குறிக்குமாயின், 'தக்கம்' என்பது தெற்கெனப் பொருள்படுமென்பது கொள்ளலாகும். அதனைக் கீழ்காட்டுவாம்.

ஆஸ்தே கர்ணாடதேஶ꞉ [illegible]
[illegible] - காவேரீ க்ருஷ்ணவேணீ [illegible]
தக்ஷிணோத்தராஶ꞉ । ஹ்ருஷ்டம் ஸம்ஶ்லிஷ்ய [illegible]
[illegible] பூர்வபாஶ்சாத்யவேலே - [illegible]
[illegible] ॥

இச்சுலோகத்தின் பொருள்:—கர்ணாடகதேசம், காவேரி கிருஷ்ண நதிகளாகிய தலைநெழுமலைகளால் ஈரமுற்ற தென்வடத்திசைகளையுடையதும், தனது கீழ்மேற்கைகளால் கீழ்மேற்கடல்களது வேலைகளை அணைந்து தழுவி இன்புற்றிலங்குவதும், கடலுறவுகொண்டு வலியுற்று அதனால் நாடெங்கும் எல்லாச்செல்வங்களும் நிலையுறப்பெற்றதும், இப்பூவுலகின்கண் எல்லாத்திசைகளிலும் பரக்கப் பரவியுலாவும் தனது புனிதப் பெரும்புகழினையுடையதுமாகவுளது.

இச்சுலோகம், ஸங்கீதரத்நாகரவியாக்கியாநமாகிய ரத்நாகரகலாநிதியின் றொடக்கத்துள்ள சுலோகங்களுள் முதலாவதும், இற்றைக்கு நானூறுண்டுகளுக்கு முற்பட்டதோர்காலத் தியற்றப்பெற்றதுமாம். இவ்வியாக்கியாநம் 'பூனா'நகரத்து ஆநந்தாச்சிரமத்தாரால் அச்சிட்டு வெளியிடப்பட்டுளது. இதன் பழையவேட்டுப்புத்தகம் இற்றைக்கும்

தஞ்சாவூர் ஸரஸ்வதீமஹாலயத்திலுளது. இச்சுலோகத்திலுள்ள(உகூ) 'தக்ஷம' என்னும் சொல்லிற்குத் 'தெற்கு' என்பது பொருளென்றல்லாது, எவர்தாம் வேறாகக்கொள்வர்? இதனை நோக்குங்கால், 'தக்கநாடு' என்பது தென்னாடேயாம்போலும்.

இற்க, மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்றும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள தமிழகராதியுள்பட எல்லா அகராதிகளிலும் மற்றுமுள்ள நிகண்டுகளிலும், 'தக்கணம்' என்பதனைத் தெற்கெனப் பொருள்படுத்தியிருத்தலுமன்றி, 'தக்கணமதுரைதான்சென்றடைந்தபின்' (மணிமே. சிறைசெய்-கஎகூ) என்றதன்கீழ் 'தக்கணம்' என்பது 'பாகதச்சிதைவு' என மகாமகோபாத்தியாய அய்யரவர்களது குறிப்பும் காணலாகும். தக்கணமதுரையென்பதற்குத் 'தென்மதுரை' யென்றல்லாது வேறு பொருளாதலும் ஆங்கு அமையுமோ? இவைகளை முன்வைத்து நோக்குங்கால், பண்டைக்காலந்தொட்டுத் தமிழ்ப்பாஷையில் 'தக்கணம்' என்னும்சொல் 'தெற்கு' என்னும் பொருள்கொண்டு முன்னோரால் வழங்கப்பட்டுவந்துளதென்பது விளங்கும். ஆகலின் 'தக்கணநாடு' தென்னாடேயாம்போலும்.

'தக்ஷிணதேசம்' என்பது தென்னாடேயாமாயின், தக்ஷிணதேசம், தக்கணநாடு, தக்கநாடு எல்லாம் பொருளளவில் ஒரேநாட்டைக்குறிக்குமென்பது விளங்குமாம்போலும்.

டி. எஸ். குப்புசாமிசாஸ்திரி.

தஞ்சாவூர்.

ஸ்ரீ:

# அறியாமை வினா.

I. சிலப்பதிகாரம் 1-வது மங்கலவாழ்த்துப்பாடலில் "மண்டேய்த்தபுகழினன்" என்னும் கொச்சகத்தின் விசேடவுரையில், உரையாசிரியராகிய அடியார்க்குநல்லார் "மண்டேய்த்த என்றார், புகழ் வளரப் பூமி சிறுகலான். மண் இடத்திற் சிறிதென்றார் வள்ளுவனாரும். புகழினன் எழுவாய்" என்று எழுதிச் செல்கின்றார். வள்ளுவர் தம் நூலில், எவ்விடத்து 'மண் இடத்திற் சிறிது' என்று கூறியிருக்கிறார் என்பது என் புன்மதிக்குப்புலப்படவில்லை.

ஆதலின் இதனைநோக்கும் அறிவுடையோர் வள்ளுவர் 'மண் இடத்திற் சிறிது' என்று கூறியிருக்குமிடத்தை இச் "செந்தமிழ்" வாயிலாய் வெளியிட்டு என் அறியாமையைப்போக்கப் பிரார்த்திக்கிறேன்.

II. புறநானூற்றில், 174-வது பாட்டில்,

"அணங்குடையவுணர்கணங்கொண்டொளித்தெனச்
சேண்விளங்குசிறப்பின்ஞாயிறுகாணா
திருள்கண்கெடுத்தபரிதிஞாலத்
திடும்பைகொள்பருவரறீரக்கடுந்திறல்
அஞ்சனவண்ணன்றந்துநிறுத்தாங்கு"

என்னும் அடிகளின் விசேடவுரையிற் புறநானூற்றுரையாசிரியர் "தேவர்களும் அசுரர்களும் பொருவுழிப் பகலும் இராப்போல் இயங்கித் தாம் போர்செய்தற்பொருட்டு அசுரர் ஞாயிற்றைக் கரந்தார்கள். ஞாலம் அதனாலுள்ள பருவரல்தீரத் திருமால் அதைக்கொண்டுவந்து விட்டதோர்கதை" என்று மேலேகாட்டிய அடிகளின் வரலாற்றை விளக்குகின்றனர்.

அவ்வரலாற்றின் முழுவிவரமும் என் சிற்றறிவிற்கெட்டவில்லை. ஆதலின் அறிவுடையோர் அதன் விவரத்தையாவது அல்லது அது கூறப்பட்டிருக்கும் நூலினையாவது இப் பத்திரிகைவாயிலாய் எனக்கு அறிவிக்கக்கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீநிவாசையங்கார்.

# இந்துதேசசரித்திரகாலக்குறிப்புகள்.

# Chronological Notes of Indian History.

கி. மு.

3102 கி. மு. (பிப்ரவரிமீ 17உ வியாழக்கிழமை இரவு) கலியுகாரம்பம் [Sewel's Indian Calendar.]

1491. மோஸஸ் என்பவரால் இஸ்ரேல்ஜாதியார் எஜிப்தினின்றும் விடுபட்டுப் புண்யபூமி அடைந்தார்கள். சீனைமலையிற் கடவுளால் மோஸஸுக்கு ஆக்ஞாதசகம் (Ten Commandments) உபதேசிக்கப்பட்டது. பஞ்சகம் (Pentateauh) என்னும் யூதவேதம் இவரால் இயற்றப்பட்டது.

1023—1000. டேவிட், ஸாலமன் என்னும் யூதஅரசர் ஜெருஸலம் என்னும் க்ஷேத்ரத்தை வசப்படுத்திக்கொண்டார்கள்.

776. பார்சுவநாதர் (ஜைன 23-ம் ஆசாரியார்) மரணம். (ரிஷபர் ஜைன மதஸ்தாபனாசாரியார்.)

659. மஹாவீரர் (ஜைனாசாரியார்) ஜனனம். [திகம்பரர்கொள்கை].

602. சிசுநாகன். மகதராஜ்யத்தையாண்ட சிசுநாகவம்சஸ்தாபகன்.

சிசுநாகவம்சாவளி.

1. சிசுநாகன்.
2. காகவர்மன்.
3. க்ஷேமதர்மன்.
4. க்ஷேமஜித்.
5. பிம்பிஸாரன். (530 கி. மு.)
6. அஜாதசத்ரு. (502 கி. மு.)
7. தர்சகன். (475 கி. மு.)
8. உதயன். (450 கி. மு.)
9. நந்திவர்த்தனன். (418 கி. மு.)
10. மஹாநந்தி.

599. மஹாவீர (வர்த்தமான)ர் ஜனனம். [சுவேதம்பரர்கொள்கை.]

530. பிம்பிஸாரன். சிசுநாகவம்ச 5-ம்அரசன். இராஜகிருஹம் என்னுந் தலைநகரை நிர்மித்தவன்.

527. பாவாபுரியில் மஹாவீரர் நிர்வாணம்.

483. புத்தர் நிர்வாணம். [செந்தமிழ் கூ 12.]

477. புத்தர் நிர்வாணம். [L. D. S.]

475. அஜாதசத்ரு. (சிசுநாகவம்சத்துதித்த 6-ம் அரசன்) மரணம்.

450. உதயன். அஜாதசத்ருவின் பௌத்ரன். சிசுநாகவம்சத்துவந்த 8-ம்அரசன் பட்டாபிஷேகம். பாடலிபுரம்நிர்மித்தவன்.

372. மஹாபத்மநந்தி. சிசுநாகவம்சக் கடைசியரசனுன மஹாநந்தியின் தாஸீபுத்ரன். இராஜ்யத்தையபகரித்து நந்தராஜவம்சத்தை ஸ்தாபித்தான்.

326. அலக்ஸாந்தர். க்ரீக்தேசத்தரசர் இந்தியாமீது படையெடுத்து வந்தவர். தக்ஷசிலைமன்னனுன அம்பி அவருடன்சேர்ந்துகொண்டான். சசிகுப்தன் அவருடைய சேனைத்தலைவனுய் உதவிபுரிந்தான்.

322. சந்திரகுப்தன். நந்தராஜவம்சம் முடிந்ததும், மகதராஜ்யத்தில் மௌர்யவம்சத்தை ஸ்தாபித்தவன்.

சாணக்யன். (கௌடில்யன்) ஓர் அந்தணன். நந்தவம்சம் அழியவும் மௌர்யவம்சந்தாபனமாகவும் உதவிபுரிந்தவன். இவன் எழுதிய நூல் அர்த்தசாஸ்த்ரம் என்னும் ராஜநீதி.

322—298. சந்திரகுப்தன்.

298. சந்திரகுப்தன் இராஜ்யத்தைவிட்டுத் துறவிவேஷம்பூண்டு, ஜைனுசாரியரான (1-வது) பத்ரபாஹு சிஷ்யனுய் தக்ஷிணதேசம் சென்றுன்.

298—269. பிந்துசாரன். மௌர்யவம்சத்து அரசன்.

297. மைசூரில் சிரவணபலகோளா என்னுமிடத்தில் ஜைனுசாரியார் பத்ரபாஹு-வின் மரணம். இதற்குப்பிறகு 12 வருஷகாலம் சந்திரகுப்தன் இவ்விடத்திற் சந்நியாசியாய்வசித்து 285-ல் மரணமானன்.

285. சந்திரகுப்தன் மரணம்.

264—232. அசோகன். மௌர்யவம்ச 3-ம் அரசன்.

261. அசோகன் களிங்கயுத்தம்.

260. அசோகன் பௌத்தமதத்தைத்தழுவியது.

257—6. அசோகன் சிலாசாஸனங்கள்.

255. அசோகன் கூட்டிய பௌத்தமஹாசங்கம்.

247. சோழர் இலங்கைமீது படையெடுத்து ஜயித்தது. அதுமுதல் 44 வருஷம் ஆண்டார்கள். [சிங்களசரித்திரம்.]

240. பாடலிபுரத்தில் பௌத்தர் 3-ம்சங்கம்.

230 கி. மு.—226 கி. பி. ஆந்திரர் தக்ஷிணத்தில் அரசாண்டார்கள். சதகர்ணி என்னும் பட்டப்பெயரும் வஹித்தார்கள்.

185. மௌர்யவம்சம் முடிந்து புஷ்யமித்ரனல் சுங்கவம்சம் ஸ்தாபனமாயிற்று.

165. கர்க்கர். ஜோதிடநூலாசிரியர்.

150—140. சகர் இந்தியாமீது படையெடுத்துவந்தார்கள்.

72. சுங்கவம்சம்போய்க் கண்வராஜவம்சம் மகததேசத்தில் ஸ்தாபனமாயிற்று. கண்வர் அந்தணர்.

56. விக்ரமசகாப்தாரம்பம். விக்ரமன் கி. பி. 4-ம்நூற்றுண்டில் தானிருந்தான் என்று சிலரும், 6-ம்நூற்றுண்டில்தானிருந்தான் என்று சிலரும் அபிப்பிராயப்படுகிறுர்கள்.

கி. பி.

15. ருத்ரதாமமஹாராஜன் அணையிலுள்ள ஓர் சிலாலிபி. ஆந்திர வம்சத்தரசனான 1-ம் சதகர்ணியால் தக்ஷணம் ஜயிக்கப்பட்ட விஷயம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

21. மத்யஇந்தியாமாஹாணம், ஸஞ்சிக்கோவில் காஷ்மீரமன்னன் அபிமன்யுவால் நிர்மிக்கப்பட்டது.

26. ஸுசர்மன். மகததேசக் கண்வர்வம்சக் கடைசியரசன். சிப்ரகன் என்றசேவகன் ஸுசர்மனைக்கொன்று ஆந்திரப்ருத்ய இராஜவம்சத்தை மகததேசத்தில் ஸ்தாபித்தான்.

53. மகததேசத்தில் ஆண்டுவந்த ஆந்திர இராஜவம்சம் நான்காய்ப் பிரிந்தது.

1. கோதாவரிக்குத்தெற்கே காகதேயர் ஆட்சிக்குட்பட்ட கணபதி வம்சம்.
2. ஓரங்கல்லில்ஆண்ட நரபுத்ரவம்சம்.
2. ஒரிஸாவில் கஜபதிவம்சம்.
4. மகதத்தில் பூர்வவம்சம்.

55—95. கரிகாலச்சோழன். உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியன் மகன். புகார் (காவேரிப்பூம்பட்டினம்) இவன் தலைநகர். இலங்கை மீது படையெடுத்துச்சென்று 1-ம் கஜபாஹுவின் தகப்பனை வென்று 1200 சிங்களரைச் சிறைபிடித்துவந்தான்.

வம்சாவளி.

கரிகாலன் (ஷடிமனைவி நாங்கூர்வேண்மகள்).

சேட்சென்னிநலங்கிள்ளி. | மாவளத்தான் நெடுங்கிள்ளி. | சோணை.

சோணை:

சேரன் செங்குட்டுவன். | இளங்கோவடிகள் (சிலப்பதிகாரம் இயற்றியவர்.)

கரிகாலன்காலத்தவர்.

பாண்டியநாட்டில்.

1. வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி.

2. நெடுஞ்செழியன் I.

சேரநாட்டில்.

1. குடிச்சேரலாதனன்.

2. சேரன்செங்குட்டுவன்.

இலங்கையில்.

1. 1-ம் கஜபாஹுவின் தந்தை.

2. 1-ம் கஜபாஹு. [செந்தமிழ்-கஉ-41.]

70. ஜெருஸலம் நாசமாக்கப்பட்டது. அதுமுதல் யூதர் அரசு அற்றுப்போயிற்று.

73—218. பௌத்த ஆந்திரபிருத்யர் விந்தியமலைக்குத்தெற்கே அரசாண்டார்கள். அமராவதியிலுள்ள பௌத்தாலயம் கட்டப்பட்டது.

75. ஜாவா (யவத்தீவில்) ஹிந்துக்கள் குடியேறினார்கள். (Indian Shipping 48).

75. நெடுஞ்செழியன் I. பாண்டியமன்னன். கோவலனை விசாரணை செய்யாமல் மரணதண்டனை விதித்துவிட்டான். தன்தவற்றைக் கண்ணகியால் அறிந்து மனம்வருந்தித் தற்கொலைபுரிந்தான்.

75—90. வெற்றிவேற்செழியன். நெடுஞ்செழியன்மகன். கோவலன் மரணத்துக்கும் தன்தகப்பன் தற்கொலைக்கும் ஒருதட்டான் காரணமென்றறிந்து அஜ்ஜாதியைச்சேர்ந்த 1000 பேர்களைக் கொலைசெய்வித்தவன்.

77—133. சதகர்ணி. சிலப்பதிகாரத்திற் குறிக்கப்பட்ட மகததேசத் தரசன். (?)

77. இந்தியர் ரோமாபுரியில் வியாபாரஞ்செய்தார்களென்று ப்ளீனி என்னும் க்ரீக் சரித்திரக்காரர் எழுதியிருக்கிறார்.

78. கானிஷ்கன் பௌத்தசங்கம்.

78. சாலிவாஹனசகாப்தாரம்பம்.

சாலிவாஹனன். கோதாவரிக்கரையில் பைதான்நகரில் ஆண்ட ஆந்திரவம்சத்தரசன்.

79. ப்ளீனி என்ற க்ரீக் சரித்திரக்காரர் மரணம். இவர் எழுதிய சரித்திரத்தில் அக்காலத்தில் இந்தியாவைப்பற்றிய பலகுறிப்புகள் அடங்கியிருக்கின்றன.

80. (மஹாவீரர் என்ற க்ஷமணசாரியார் நிர்வாணம்முதல் 609 வருஷம்.) ஜைனர் இதுமுதல் திகம்பரர் சுவேதம்பரர் என இரு பிரிவினரானார்கள் என்பது ஒருகொள்கை.

80. சுந்தரசதகர்ணி. 20-ம் அரசன்.

81. சகோதரசதகர்ணி. 21-ம் அரசன்.

81. சிவஸ்வாதிசதகர்ணி. 22-ம் அரசன்.

85. மாதவீபுத்ரசகஸேனன்.

90—128. நெடுஞ்செழியன் II. பாண்டியராஜன். தலையாலங்கானம் போரில் வென்றவன். இவன்காலத்தவர்:—

(1) நெடுமுடிக்கிள்ளி. இவன்காலத்திற் சோழர் தலைநகராகிய காவேரிப்பட்டணம் கடற்பெருக்கால் அழிந்து போயிற்று.

(2) கஜபாஹு I. இலங்கைமன்னன்.

90. சேரன்செங்குட்டுவன். தன்தந்தை 2-ம் ஆதனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தான்.

90. மணிமேகலை. (ஐம்பெருங்காப்பியங்களிலொன்று) பௌத்தாசிரியனால் பௌத்தமதஸம்ப்ரதாயத்துக்கிணங்க இயற்றப்பட்டது.

95—101. இளநாகன். இலங்கையரசன்.

105—120. கிள்ளிவளவசோழன். பாணவம்சத்தரச் சீதாதகையை மணம்புரிந்தான்.

109—135. கௌதமீபுத்ரசதகர்ணி. ஆந்திரவம்ச 23-ம் அரசன்.

113—125. கஜபாஹு I. இலங்கையரசன். [90-ஐயும்பார்க்க.] (110-ல் ?) சோழதேசத்தின்மீது படையெடுத்துவந்து சோழராஜனைச் சிறைபிடித்துச் சென்றான்.

119. (சகம் 41) நாகபணன். கூர்ஜ்ஜரத்துள்ள சௌராஷ்டசகவம்சஸ்தாபகன். ருத்ரஸிம்மன் (388 கி. பி.) இவ்வம்சத்துக் கடைசியரசன்.

125—153. கானிஷ்கன். (K. V. R's History.)

126. கௌதமீபுத்ரசதகர்ணி (விலிவயகிரன் II) நாகபணனைத் தோற்கடித்து, அவ்வம்சத்தவன் இன்னொருவனை சகக்ஷத்ரபதியாக்கினான். கொஞ்சக்காலத்துக்குப்பிறகு கூர்ஜரசகக்ஷத்ரபர் ஸ்வாதீன (மஹாக்ஷத்ரப)ர் ஆனார்கள்.

128—140. உக்ரப்பெருவழுதி.

135—162. வாஸிஷ்டீபுத்ரசதகர்ணி. ஆந்திரவம்ச 24-ம் அரசன்.

140—150. நான்மாறபாண்டியன் I. மணிமேகலைஎழுதிய சீத்தலைச்சாத்தனார் இவர்காலத்தவர். நக்கீரர், நான்மாறன்பேரனான 2ம் நான்மாறன் காலத்திருந்ததாய் ஊகிக்கப்படுகின்றது. (Tamil Studies).

150. கிர்நார்ச்சிலைலிபி. ருத்ரதாமன்என்ற அரசனால் கிர்னார்அணை கட்டப்பட்டு சுதர்சனம் என்னும் தடாகமும் நிர்மிக்கப்பட்டது. இதற்கு ஞாபகச்சின்னமாய் இ ச் சி லை லி பி வரையப்பட்டது. அசோகன்காலத்திலேயே அவன் ப்ரதிநிதியால் இத்தடாகத்தினின்றும் ஒரு பாசனக்கால் வெட்டப்பட்டது. பிறகு இவ்வணை ஜீர்ணமாய்விட்டதால் ருத்ரதாமனால் 150 ல் புதுப்பிக்கப்பட்டது. பிறகு 5-ம்நூற்றாண்டில் சக்ரபாலித சந்திரகுப்தமஹாராஜன் ப்ரதிநிதியால் இவ்வணை மறுபடி புதுப்பிக்கப்பட்டது. இந்தக் கிர்னார்லிபிதான் இதுவரையகப்பட்டுள்ளவைகளில் ஆதியாயுள்ளது. அக்காலத்துச் சரித்திராய்ச்சிக்கு மிக்க சாதகமாயிருக்கின்றது.

153. ஹுவிஷ்கன். காச்மீரமன்னன்.

163. தாலமியின் மரணம்.

163. வாஸிஷ்டீபுத்ரபுலோமாயி மரணம்.

163—170. சிவஸ்ரீபுலோமாயி ஆந்திரவம்ச 25-ம் அரசன்.

170—173. சிவஸ்கந்தசதகர்ணி. ஆந்திரவம்ச 26-ம் அரசன்.

173—202. கோதமீபுத்ர (II) யக்ஞஸ்ரீ. ஆந்திரவம்ச 27-ம் அரசன்.

178. சிலலிபி. கொங்குதேசஅரசனுன திருவிக்ரமதேவன் சங்கராசாரியாரால் ஜைமணமதத்தினின்றும் சைவமதத்திற் சேர்க்கப் பட்டதாய் வரையப்பட்டிருக்கிறது. இந்தலிபி தப்பு (forgery) என்று ஸுவேல் அபிப்பிராயப்படுகிறுர். சங்கராசாரியார்காலம் 788-820 என்று ஊஹிக்கப்பட்டிருக்கின்றது.

180. அந்தியோக்கிலிருந்த தியோபைலஸ். இவன்காலம்வரை பைபிள் உத்தரபாகம் (New Testament) வைதீக ஆதாரமாய் அங்கீகரிக்கப்படவில்லை.

188. சூத்ரகமஹாராஜன். மிருச்சகடிகை என்ற ஸம்ஸ்கிருதநாடகம் இயற்றியவன்.

202—208. விஜயசதகர்ணி. ஆந்திரவம்ச 28-ம் அரசன்.

208—218. சந்திரஸ்ரீசதகர்ணி. ஆந்திரவம்ச 29-ம் அரசன்.

214. குலோத்துங்கசோழன். சோழராஜ்யம் பாண்டியராஜ்யத்தினின்றும்பிரிந்து ஸ்வாதீனமடைந்தது. தஞ்சாவூர் (?) தலைநகராயிற்று.

218—225. 4-ம் புலோமாயி. ஆந்திரவம்ச 30-ம் (கடைசி) அரசன்.

225. ஆந்திரவம்சம் முடிந்தது.

248. சேதி அல்லது காலசூரிசகாப்தாரம்பம். சேதி (பண்டில்கண்ட்) தேசத்திற் காலசூரிவம்சம் கிருஷ்ணமஹாராஜனால் ஸ்தாபிக்கப் பட்டது. கிருஷ்ணமஹாராஜன் சிவனுக்கும் ப்ராம்மணப்பெண்ணுக்கும் பிறந்தவன்என்றும், அவன் அம்பட்டன் வேஷம்பூண்டு காலஞ்ஜரன் என்ற அசுரனைக்கொன்றுனென்றும் சொல்லப்படுகிறது. [Mysore and Coorg, page 78.]

296—315. லம்பகன்னன். இலங்கையரசன்.

302—315. கோதகாபயன் (மேகவர்ணபயன்). இலங்கைமன்னன். தமிழ்ச்சைவாசாரியார் ஒருவர் இம்மன்னனைப் பௌத்தமதத்தினின்றும் சைவமதத்திற்சேர்த்தாரென்றும், இவர் மாணிக்கவாசகராயிருக்கலாமென்றும் ஊஹிக்கப்படுகின்றது.

(V. A. Smith.)

320. (பிப்ரவரி 26) சந்திரகுப்தனால் பாடலீபுரத்திற் குப்தராஜ்யம் சம் ஸ்தாபனமாயிற்று. இதுமுதல் குப்தசகாப்தாரம்பம்.

324. கான்ஸ்டன்டைன்என்ற ரோம்சக்ரவர்த்தி கிறிஸ்தவமதத்தை ராஜமதமாக்கி அநேகசங்கங்கள்கூட்டிப் பரவச்செய்தான்.

325—352. மஹாஸேனன். இலங்கையரசன்.

326—375. சமுத்ரகுப்தன். சந்திரகுப்தன் மகன்.

338. வதூவல்லவமல்லநந்திதேவவர்மன். கிழக்குமைசூரில் ஆண்ட பாணவம்சத்தரசன்.

340. ஸமுத்திரகுப்தன் இந்தியாசக்ரவர்த்தியானான்.

350. ஸமுத்ரகுப்தன் தக்ஷணத்தின்மீது படையெடுத்துவந்தபொழுது காஞ்சீபுரத்தில் விஷ்ணுகோபன் என்ற பல்லவஅரசன் ஆண்டுகொண்டிருந்தான். அப்பொழுது சோழ பாண்டியதேசங்கள் பெயரேதெரியாமல் நிலைகுலைந்திருந்தன. விஷ்ணுகோபன் தோல்வியடைந்தான். அப்பொழுது வெங்கிநாட்டிலாண்டவன் ஹஸ்திவர்மபல்லவன் என்று ஊகிக்கப்படுகிறது.

(V. A. Smith.)

360. மேகவர்மன் என்ற இலங்கையரசன் சமுத்திரகுப்தனிடம் தன் ஸ்தானாபதிகளையனுப்பினான்.

375—413. சந்திரகுப்தன் II (விக்கிரமாதித்யன்) குப்தவம்ச 3-ம் அரசன்.

389. ஸரபிநகரக்கோவிலும், அலக்ஸந்திரன் புஸ்தகாலயம் என்ற சிறந்த புஸ்தகாலயமும் தியோபைலஸ்என்ற பாதிரியின் போதனையால் தியோதோஷி என்ற சக்கரவர்த்தியால் நாசமாக்கப்பட்டன. 7-ம் நூற்றாண்டில் உமர் என்பவரால் நாசமாக்கப்பட்டதாய்ச் சொல்லுவது பிசகு. (அமீர்ஆலி. ஸாரஸன் சரித்திரம்.)

393. ஹிப்போ என்றவிடத்திற் கிறிஸ்தவசங்கம். கிறிஸ்தவஸம்ப்ரதாயங்களைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. ஆனால் தீர்மானமொன்றும் ஏற்படவில்லை.

395. 2-ம் சந்திரகுப்தன், மாளவம், கூர்ஜரம், கத்திவார்முதலான இடங்களை ஜயித்து விக்ரமாதித்யசகாரிஎன்ற பட்டமும்பெற்று ஆண்டு, உஜ்ஜினியையும் தன் தலைநகராக்கிக்கொண்டான்.

398. புத்தபாதன். சக்கியவம்சத்திளவரசன். சீனாவந்துசேர்ந்தான்.
(Indian Shipping.)

399—414. பாஹியன்என்ற சீனயாத்ரிகன் இந்தியாவில் ஸஞ்சாரஞ் செய்தான். அவன் எழுதியிருக்குங்குறிப்புகள் அக்கால இந்திய சரித்திரநிர்ணயத்துக்கு மிக்க உபயோகமாயிருக்கின்றன.

401. (குப்தசகாப்தம் 82) உதயகிரிச்சிலைலிபி.

405. குமாரஜீவன், நாகார்ஜுனனுடைய சரித்திரத்தை மொழி பெயர்த்தான்.

அசுவகோஷன் புத்தசரிதம் எழுதினான். ஹையூன்ஸங் இவரைப் பற்றி 673-ல் சொல்லியிருக்கிறார்.

405—411. பாஹியன் குப்தராஜ்யத்தில் ஸஞ்சரித்தான்.

412. (கு. ச. 93) ஸஞ்சிச்சிலைலிபி.

413. (கு. ச. 94) குமாரகுப்தன் I.

420. சங்கவர்மன். சிங்களன். மஹிஷாஸாவிஜயம் மொழிபெயர்த்தவன். சீனாவந்துசேர்ந்தான். (Indian Shipping p. 165.)

430. மாத்ரிகுப்தன். காச்மீர அரசன்.

மேண்டன் ஷீ ஸமஸ்தானவித்வான். ஹயக்ரீவவதம் எழுதின வன். (ஸுபாஷிதாவளி 92.)

432. ப்ரவரஸேனன். காச்மீரஅரசன். ராஜகவி. சேதுபந்தம் எனும் ப்ராகிருதகாவியம் எழுதியவர். பாணகவியால் புகழப்பெற்றவர்.

ஸுவாஷிதாவளி.

433. நந்திஎன்னும் ஒருகப்பல் சிங்களருடன் சீனாவந்துசேர்ந்தது. [Indian Shipping 165.]

437. (கலி. 3538) சேரமான்பெருமாள் பட்டத்துக்குவந்தனர். இவர் ஒரு ராஜகவி. சைவபக்தர் இவரியற்றிய நூல்கள்:—

1. மும்மணிக்கோவை.
2. கைலாஸஉலா.
3. பொன்வண்ணத்தந்தாதி. [தமிழ் ப்ளூடார்க்.]

437. (விக். 493=கு. ச. 117) மந்தஸரஸ்சிலைலிபி. டாக்டர் Fleet (ப்ளீட்) என்பவராற் கண்டுபிடிக்கப்பட்டது. விந்துதேசம் தச புரத்தில் மஹாதேவாலயம் முன்னணிக்கல்லில் வரையப்பட்டுள் ளது. விசுவவர்மன் அக்காலத்தில் அத்தேசத்தரசன். குமார குப்தன் (415-449)காலத்தவன். 473 (விக். 529.)ல் அவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டதாகவும் அச்சிலைலிபியிலே வரையப்பட்டிருக் கின்றது.

𑌮𑌾𑌲𑌵𑌾𑌨𑌾𑌂 𑌗𑌣𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌾
𑌯𑌾𑌤𑍇 𑌶𑌤𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑍇 ।
𑌤𑍍𑌰𑌿𑌨𑌵𑌤𑍍𑌯𑌧𑌿𑌕𑌾𑌬𑍍𑌦𑌾𑌨𑌾𑌂
𑌋𑌤𑍌 𑌸𑍇𑌵𑍍𑌯𑌘𑌨𑌸𑍍𑌵𑌨𑍇 ॥

450. மேகவம்சன். காச்மீரமன்னன். மறுபடி ஆட்சிக்குவந்த கோணர்த்தவம்ச முதல்அரசன். இலங்கைமீது படையெடுத்து அதை ஆக்ரமித்துக்கொண்டான். [இலங்கைச்சரித்திரத்தாலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.]

450. புஷ்யமித்ரன் சண்டை.

454. வல்லபியில் ஜைனசங்கம்.

தேவார்த்திஞானி—ஷ சபாநாயகர்.

455. ஸ்கந்தகுப்தன் முதலாவது ஹூணயுத்தம்.

470—480. இரண்டாவது ஹூணயுத்தம்.

470. (விக்ரம. 526) தென்மதுரையில் பூஜ்யபாதர் சிஷ்யர்வஜ்ரநந்தியால் திகம்பர ஜைனத்ராவிட சங்கமொன்று ஸ்தாபனமாயிற்று. [திகம்பரதர்சனம்.]

473. மந்தஸரஸ்சிலேலிபி மாளவாப்தம் 530.

473—1132. ஒரிஸாவில் கேசரிவம்சத்தரசர் (36 பேர்) ஆண்டார்கள். இவ்வம்சம் யயாதிகேசரியால் ஸ்தாபனமாயிற்று. கேசரிவம்சம் முடிந்ததும் (சோரகங்கனால் ஸ்தாபிக்கப்பட்ட) கங்கவம்சத்தரசர் ஒரிஸாவில் ஆண்டார்கள்.

474. யயாதிகேசரி யவனரைஜ்ஜயித்து ஓட்டினான்.

476. ஆர்யபட்டர் (வானநூலாசிரியர்) ஜனனம்.

480. ஸ்கந்தகுப்தன் (குமாரகுப்தன்மகன்) மரணம். குப்தவம்ச 5-ம் அரசன். இவனுடன் குப்தர் முதல்வம்சம் அற்றுப்போயிற்று.

480. புருகுப்தன். குப்தர்களில் இரண்டாவது வம்சத்தில் முதல் அரசன்.

482. நிர்வினீதன் (துர்வினீதன்) கங்கவம்சத்தரசன் பட்டாபிஷேகம்.

489. சிலேலிபி. கல்யாணியிலாண்ட சாளுக்யவேந்தனான ஜயசிம்மன் மகன் புலிகேசியால் வரையப்பட்டது.

490—510. தோரமாணன். ஹூணர்தலைவன். குப்தராஜ்யத்தை அழித்தவன். பஞ்சாப், ராஜபுதனம், மத்யஇந்தியாவில் தன் அதிகாரத்தை ஸ்தாபித்தவன்.

499. [சகம். 421 மார்ச் 19 வெள்ளிக்கிழமை] ஆர்யபட்டர் (23-ம் வயது). ஆரியாஷ்டசதம் எழுதிமுடித்ததாய் அந்நூலி (II–10) லேயே வரையப்பட்டிருக்கிறது. ஆர்யபட்டர் சிறந்த வானநூலாசிரியர் (1906 I. R. 28.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

சிவமயம்.

# *கொங்கதேச அரசர்கள்.

### (க) ஸ்ரீ வீர ராஜசக்கரவர்த்தி.

கலியுகத்திலே இராசசரித்திர புத்தகத்திலே முதற்கட் கொங்கதேசத்திலே ஸ்கந்தபுரத்திலே ரெட்டிகுலத்திலே தோன்றிய வீர ராஜசக்கரவர்த்தி கொங்கதேசத்துக்கு அரசனாய்க் கிரீடந்தரித்துச் சகல பாக்கியத்தையுமடைந்து நல்ல ஞானமுடையவனாய் அரசாண்டனன்.

### (உ) கோவிந்தராயன் பட்டம்.

சூரியவம்சத்திலே கொங்கதேசத்திலே ஸ்கந்தபுரத்திலே கோவிந்தராயன் பட்டங்கட்டிக்கொண்டு தகப்பன் வீரராயசக்கரவர்த்தியைக்காட்டிலும், பூமண்டலத்திலே மிக்க கீர்த்தியையடைந்து தனக்குச் சமானமாக உலகத்தில் ஒருவரும் இல்லையென்று மிக்க சந்தோஷத்தையடைந்து அரசாண்டனன்.

### (ங) கிருஷ்ணராயன் பட்டம்.

கொங்கதேசத்திலே ஸ்கந்தபுரத்திலே கிருஷ்ணராயன் பட்டங்கட்டிக்கொண்டு தன் தகப்பன் கோவிந்தராயனைக்காட்டிலும் நீதிசாஸ்திரப்படி நியாயம் விசாரித்து இராச்சியத்திலே இவனுக்குச் சமானம் ஒருவரும் இல்லையென்று சொல்லும்படி கீர்த்தியடைந்து அரசாண்டனன்.

### (ச) கலவல்லவராயன் ப......ம்.

கொங்கதேசத்திலே ஸ்கந்தபுரத்திலே கலவல்லவராயன் தன் தகப்பன் கிருஷ்ணராயனைக்காட்டிலும், நீதிசாஸ்திரப்படி நியாயம் விசாரித்து அரசாண்டு மிக்க இன்பமநுபவித்துக் கீர்த்தியையடைந்தான்.

---

* இது சரித்திர ஆராய்ச்சி செய்வார்க்குப் பெரிதும் பயன்படுமென்று கருதி, பாண்டியன் புத்தகசாலைக் கையெழுத்துப்பிரதியிலுள்ளவாறே பதிப்பிக்கப்பெற்றது.

## (ஞ) கோவிந்தராயன் ப......ம்.

கொங்கதேசத்திலே ஸ்கந்தபுரத்திலே கோவிந்தராயன் பட்டங் கட்டிக்கொண்டு அவன் தகப்பன் கலவல்லவராயனைக்காட்டிலும் மிக்க கீர்த்தியை அடைந்து பகையரசர்களைப்போரில்வென்று அவர்களிடத் திற் கப்பம்வாங்கிப் பலதருமங்களைச்செய்து அரசாண்டனன். அப் பேரரசனும் சாலிவாகன சக வருடம் ச. சுபானுவருடம் ஜஎவ. வைகாச சுத்த பௌர்ணமியிலே அரிஷ்டண்ணன் என்னும் பெயரை யுடைய ஜைனனுக்குப் பூமிசாசனம் பண்ணிக்கொடுத்தான். அப்பூமி குலஸதக்கிராமத்திலே சேர்ந்திருக்கிற பொம்மகொம்மனென்கிற கிரா மத்திலே எழுகண்டகம் விரைக்கிற பூமிவயலென்க. இது கொங்கணி வருமம் பெஸ்தி ஜைனதேவர் அர்ச்சனைநிமித்தம் கோவிலுக்குக் கொடுத்த தருமசாசனமாம். அந்தக்கோவிலில் பூஜைபண்ணுகிற அரிஷ்டண்ணனுடைய குரு பிறஞாபனுசாரி. அவன் ஸ்ரீ காரோக விருக்ஷமூலத்திலே வாசம்பண்ணுகிறவன். அக்காலத்திருந்த ஜைன ருடைய பேர் பஞ்சநந்தி, சொக்கப்பன், ஜெயதேவன்.

## (சு) சதுர்ப்புய கன்ன (ர) தேவசக்கரவர்த்தி ப......ம்.

சூரிய வம்சத்திலே ரெட்டிகுலத்திலே தோன்றிய அவனுக்கு நான்கு கைகள் இருந்தன. அவன் கொங்கதேசத்திலே ஸ்கந்தபுரத் திலே பட்டங்கட்டிக்கொண்டு அரசாண்டனன். இவன் போர்க்குச் செல்லவேண்டுமானால் போர்க்குரிய வாத்தியமுழங்கக் களிப்புடனே சென்று பகைவரைவென்று திரும்புவன். இவன் வீணை, பரதம் முத லிய சாஸ்திரங்களில் வல்லவன். இவன் கோதண்டம் முதலிய நாகாதி மந்திரம் தெரிந்தவன். அக்காலத்து மூவர்கள் ஜைனசாஸ் திரம் தெரிந்தவர்கள். அவர்களிற் குருநாத நந்தியென்கிறவன் அவர் களுடைய சாஸ்திரத்தில் மிக்க பாண்டித்தியமுடையவன். அவன் அம் மதத்தின்கண்ணுள்ள அரசருக்குச் சாஸ்திரோபதேசஞ்செய் பவன். அவன் வயோதிகமுடையவனுயிருந்தான்.

## (எ) திருவிக்கிரமதேவசக்கரவர்த்தி ப......ம். சக. ௱.

அவன் மகன் திருவிக்கிரமதேவசக்கரவர்த்தி ஸ்கந்தபுரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு அரசாண்டனன். அக்காலத்து

அவனுக்குச் சங்கரதேவர்தோன்றி ஜைனமதத்தைவிட்டுச் சைவமதத்திலே வரும்படி கட்டளையிட்டனர். அவன், பின்னர்ச் சிவஞானமடைந்து வாழ்ந்திருந்தான். அவன் தென்றேசத்திற்குப் படையெடுத்துப்போம்பொழுது பூதானமுதலிய தானம்பண்ணிச்சென்று சேர சோழ பாண்டிய மண்டலங்களை வென்றுவந்தான். அப்பொழுது அவன் தானம்பண்ணின சாசன்மாவது சாலிவாகன சக. வருடம் ஈ. சித்தார்த்தி ருக. வைகாசிமீ சுக்கிலபக்ஷத்திலே திங்கட்கிழமையில் சந்திரகிரகணம் பாதிபிடிக்கிற வேளையிலே திருவிக்கிரமசக்கரவர்த்தியானவன் பாரத்துவாசகோத்திரத்திலேதோன்றிய வித்துவான் நரசிங்கபட்ட குருவுக்குப் பஞ்சசதகோடி கிராமம் தர்மாசனம். அந்தக்கிராமம் கொங்கதேசத்திலே. அந்தச் சங்கரதேவர்கோவில் ஸ்கந்தபுரத்திலே யிருக்கிறது. இவன் கன்னடதேசத்தையும் அரசாட்சி செய்துவந்தான்.

(அ) ஸ்ரீமத்-கொங்கணிவரம் தர்மமகாதிராயன் ப...ம். சக, ககக.

காணவாயன் கோத்திரத்திலே கங்கைகுலத்திலே உண்டாயிருக்கிற ஸ்ரீமத்-கொங்கணிவரம் தர்மமகாதிராயன் கொங்கதேசத்திலே விசயஸ்கந்தபுரத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு அரசாண்டனன். இவன் போர்க்குச்செல்லும்போது தன்னுடைய கத்தியினாலே ஒரு கல்லைவெட்டித் துண்டித்துவிட்டு இக்கல் துண்டமானதுபோலப் பகையரசருடைய உடலைத் துண்டம்பண்ணுவேனென்று சபதஞ்செய்து பகையரசர்களை அங்ஙனமே வெட்டியெறிந்தனன். தனக்குக் கீழ்ப்படிந்துவணங்கிய அரசர்களிடத்திலே கப்பம் வாங்கி வந்தனன். இவன் கொங்கர் குலத்திலே செய்கிற பாபமாகிற அந்தகாரத்திற்குச் சூரியனைப்போன்றிருந்தனன். இவன் பெரிய சம்பத்துடையவனாயிருந்ததனால் ஸ்ரீமது என்னும் பட்டமெய்தினன். தர்மசாஸ்திரப்படி அரசாண்டதனால் தர்மமகாதிராயனென்று பெயர் பெற்றனன். இவன் பெயர் கொங்கதேசத்துப் பட்டயத்து ஸ்ரீமத்-கொங்கணிவரம் தர்மமகாதிராயன் மிக்க கீர்த்தியடைந்து அரசாண்டனன் என்று காணப்படுகிறது. இவன் பட்டாபிஷேகம் சக வருடம் ஈஉக. பிரமோதூத-ஹு.

### கூ. ஸ்ரீமங் மாதவமகாதிராயன். ப...ம்.

தர்மமகாதிராயன் புத்திரனாகிய ஸ்ரீமங் மாதவமகாதிராயன் விசயஸ்கந்தபுரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு தன்னுடைய தகப்பனைக்காட்டிலும் அதிகமாகக் குடிகளுக்கிதஞ்செய்து அரசாண்டான். இவன் கல்வி, கேள்விகளில் தேர்ச்சியுற்றவன். அநேக கவிராயர்களைத் தன்னவையிலழைத்துவைத்துப் பாதுகாத்து வந்தவன். கற்பக விருக்ஷம்போல யார் வந்து என்ன பொருளைக்கேட்டாலும் அவர்கட்கு இல்லையென்று சொல்லாமற் கொடுத்துக் கீர்த்தி பெற்றவன். இங்ஙனம் கொடுத்தலாலே உலகத்தவர்கள் ஸ்ரீமங் மாதவமகாதிராஜனென்று பெயரிட்டழைத்து வந்தனர்.

### கo. ஸ்ரீமத்தரிவர்ம மகாதிராயன். ப...ம். சக. உகo.

மேற்கூறிய அரசன் புத்திரனாகிய ஸ்ரீமத்தரிவர்ம மஹாதிராயன் கொங்கதேசத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு கன்னடதேசத்திற்குத் தலைநகரமாகிய தளவன்புரத்திலே வீற்றிருந்து கொங்கதேசத்தையும், கன்னடதேசத்தையும் அரசாண்டு வந்தனன். இவன் சாமபேததானதண்டமாகிய சதுர்வித உபாயங்களினாலே பகையரசர்களையடக்கிக் கப்பம்வாங்கிவந்தனன். சமுத்திரமத்தியிலேயிருக்கிறதேசங்களிலும் இவன் மகாசூரனென்று பெயர்பெற்றிருந்தனன். இவன் இலக்குமியோடு கூடியிருக்கிற ஹரியைக்காட்டிலும் அதிகசெல்வமுடையவனாயிருந்தகாரணத்தாலே இவனை ஸ்ரீமத் ஹரிவருமமகாதிராயனென்று அழைத்தார்கள். இவன் அநேக ஜனங்களுக்குப் பூதானம்செய்தான். இதுவன்றிச் சகவருடம் உகo சௌமிய வருடம் பங்குனிமீ சுக்கிலபட்சம் பௌர்ணமி பிரஹஸ்பதிவாரத்திலே தகரேர்என்றகிராமம் தலைக்காட்டின் முன்னேயிருக்கிற பேட்டையில் குடியிருக்கிற சிபாய்கள் சகலர்க்கும் மூன்று பங்கும் அந்தக்கிராமத்திலேயிருக்கிற மூலஸ்தானேஸ்வரசுவாமி கோவிற் பூசைசெய்கிற பிராமணனுக்கு ஒரு பங்குமாகத்தானம் பண்ணினான்.

(இன்னும் தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

உ

# இரணியன்வதைப்பரணி.

"செந்தமிழ்" (தொகுதி-கரு பகுதி உ-ல்) கூசா-ம்பக்கத்தொடர்ச்சி.

திருவிழந்துதிறலிழந்துதிசைகாக்குந்தொழிலிழந்துதெய்வச்சோதி
யுருவிழந்துதிரிகின்றாரிழவாதவுயிர்சுமந்தவுடலங்கொண்டே. (164)

அந்தணராகுதிமறந்தாருமறையுமறந்தனபோரறமுஞ்சால
நொந்ததுமானிலமடந்தைகிடந்தநெடுந்தலையாவுநுடங்குமன்றே. ()

முத்தேவர்தொழிலானமுதன்மூன்றுஞ்செயலின்றிமுதலாரென்று
ரெத்தேவரெம்மனிதருளராவருளராலிருப்பதெங்கே. (166)

பாரவுணர்விசும்பவுணர்பசும்பொனெடுவரையவுணர்பார்க்கிலெங்கும்
பேரவுணரெனும்பெயரேபிறிதொருபேரிலையென்றுபேசக்கேட்டே. ()

வேறு.

ஆரணநாயகியேழுலகானவைதானவனுல்விழிபுங்
காரணமாவதுவானவர்தானவர்கட்டுரைசெய்கெனவே. (168)

மீளவணங்கைவணங்கியெழுந்துவிளம்பலுறுவெருவா
வாளவுணன்றனையேயருகாகவழைத்திதுகேளெனவே. (169)

திருநகைவந்ததுநயனநெடுங்கடைசிவநவநதவ
ளருகுறநின்றனமறையில்விளம்புவதே. (170)

அரணியநெஞ்சினனழல்புரைவெஞ்சினனசுரனவன்பெயர்தா
னிரணியனென்பதிவ்வெழுபுவனங்களுமிடருறவந்தவனே. (171)

பதியொருவன்புணர்பருவமடந்தையரிருவர்பயந்தவரிற்
றிதியெனநின்றவளசுரர்குலந்தொழுதெரிவைபயந்தவனே. (172)

அவன்வரமும்பெருவலியும்வரம்பிலவளவிலறிந்தனகேள்
சிவனவனெஞ்சினுநியதமவன்பெயர்செப்புமினிச்செயலே. (173)

தரணியின்மேலுயிருடையசராசரசகலசமூகமெலா
மிரணியனேநமவிரணியனேநமவென்றிதுபேசுவதே. (174)

காலைபடானிருள்மாலைபடான்வருகாலன்விடாதுயிர்சூழ்
வேலைபடானெனையாயுதமேலைபடாலெனவே. (175)

பேடுமடந்தைபெருந்திறலாருயிர்பெற்றவைவயில்லவையென்
றாடுபிறம்பலுகும்பரொடிம்பரிலூறுபடானவனே. (176)

வானவர்மாதவர்மானிடரால்வருமாரணமோகனமென்
றூனவையாவையுநோவனசெய்யினுமாவிவிடானவனே. (177)

இந்திரனுமொருகாலொருகால்வெயிலிரவியுமாமிரவிற்
சந்திரனுமொருகாலொருகாலுயர்தனபதியாமவனே. (178)

அஞ்சுயர்பூதமுமாமொருகாலொருகாலலையாழியுமா
மஞ்சுயர்மாமழையாமொருகாலொருவானதியாய்வருமே. (179)

எட்டுவரைக்குலமாமொருகாலொருகாலுயரெண்டிசையிற்
கட்டுமதக்கரியாமொருகாலொருகட்செவியாமவனே. (180)

பங்கயமேறியிருந்துயிர்கோடிபடைத்தயிராபதமாம்
வெங்கயமேறிமகிழ்ந்தமராபதிவீதியுலாவருமே. (181)

வெள்ளிநெடுங்கிரிமேல்விளையாடிவிடாதவிடாய்கெடமால்
பள்ளிகொளுங்கடலோதமெலாமொருபாதையின்மேல்வருமே. (182)

மந்திரநின்றதுசென்றிடராவிகல்வானவர்தானவர்பண்
டிந்தவிலங்கலுரங்கொல்வருந்தியெடுத்ததெனுநகுமே. (183)

ஆழியுவர்ப்புனலென்றணுகானலையாழிபடிந்தறியான்
வாழிபெரும்புறமாகடலாடவன்மஞ்சனமாடுவதே. (184)

மாடகபாடவிசாலமடப்பளிமாநதிவாழ்பதியே
யாடகமேருசிலாதலமேயவனூரமுதூணிடமே. (185)

நண்ணியுடன்புணர்போகமடந்தையர்நாகமடந்தையரே
விண்ணிலரம்பையரெண்ணில்வரம்பிலர்வெள்ளமடந்தையரே. (186)

வென்றிதுடர்ந்தெழுதானவன்வாழ்பதிவேறுளதாயினுமுன்
றோன்றுதுடங்கிவரும்பதியின்பெயர்சோணிதமாபுரமே. (187)

பொன்னகரோவளகாபுரியோபுகநாகர்புலம்பிலமோ
வன்னகரோடெதிர்போதுமெனத்தரமாவதுகண்டிலமே. (188)

ஆயிரமாயிரவோசனைவானமொராறொருநூறகலம்
போயபின்வானவரானவர்தேடியதொல்புகழ்புக்கதுவே. (189)

மேலொருவெற்றிவிளம்புவதென்சிலவெஞ்சினவஞ்சகனார்
நாலொருபத்துடனென்பதுசெந்தழல்நல்லரணாகியதே. (190)

பெண்ணிலருங்கலமேயவனேவுபெரும்படையின்றொகைதா
னெண்ணில்வரம்பிலதானையையானையையெண்ணில்வலம்புரியே. ()

அற்புதமெய்த்தொழிலாரமுதேயணிதேர்நிறையற்புதமே
நற்பதுமத்தனவேல்விழியாய்பரிநற்பதுமத்தளவே. (192)

வாளவுணர்க்கிறையானைமலைத்தெதிர்வானவரைப்பொருவார்
மீளவுணர்த்துவதாயிரகோடிவிகற்பவிகற்படையே. (193)

இதுபடையின்றொகையிதுமருவும்பதியிவையவுணன்செயல்வே
றதுவரமும்பெறுவலியுமவன்பெரிதமரர்பயங்கரனே. (194)

பண்டவனுக்கமராபதிவிட்டதிர்பாலலைவேலைபுகப்
புண்டரிகத்தயனேமுதல்வானையர்போயினர்போயினரே. (195)

அம்மனைமுன்சிலகாலமெலாமவருயிர்த்துணையித்
தம்மனையஞ்சிவபின்பவன்வந்துயிர்சாலவுமஞ்சினரே. (196)

மாய்வகையேவிடமாலிசுமாலியர்வஞ்சனைகண்டறிவே
மியாமிதுகைதவமாயவினோதரையிப்படிகண்டிலமே. (197)

என்றினசொல்லியிறைஞ்சியபேயையிருந்தனபேயடையக்
கொன்றனைகொன்றனைவந்தனவந்தனவென்றுகுலைந்தனவே. (198)

வாயுமுலந்தனநெஞ்சுமுலந்தனவஞ்சனையஞ்சுதலா
லோயுமுடம்பிலுயிர்ப்பொறைசாலவொடுங்கிநடுங்கினவே. (199)

அவ்வையிலவ்வையுமஞ்சவிரஞ்சவிறென்றலகைக்கருளிச்
செவ்வையினெஞ்சினியற்றியதீமைதெளிந்தமைசெப்பிடவே. (200)

வேறு.

அம்புராசியில்விரும்பி ...ன் றுயிலனந்தபோகசயனத்தின்மே
லெம்பிரானமரர்தம்பிரானவனெழுந்திராமலிவைவந்ததே. (201)

அடையவந்தெவருமடிமையென்றுமுளதமரருந்தொழுதுபரவுதா
ளுடையசெங்கமலமலைபுணர்ந்தவனுணர்ந்திலாமையிவைவந்ததே.

வானமாமுகடுதோயமாகடல்வரம்பிலோகைநிரம்புநாள்
மீனமாகிவிளையாடுமாலவன்வெளிப்படாமையிவைவந்ததே. (203)

குன்றராவொடுசுழன்றுவாருதிகுழம்பவாரமுதெழுமநா
ளன்றொராமைவடிவானநாயகனறிந்திலாமையிவைவந்ததே. (204)

நீழலாழிவெயில்சூழவாழியொருநீலமால்வரைகிமிர்ந்தெனக்
கேழலாயபெருமாயனுருலகுகேள்வியின்மையிவைவந்ததே. (205)

அன்றுகேழலுருவானமால்செருவிலாடகக்கணசுரேசனைக்
கொன்றவன்குருதிவேலையாவிறைகுளிர்ந்ததிக்கொடியபாலையே.(206)

ஓரெயிற்றிலொருகூறுபட்டவுலகங்களியாவையுமொதுங்கவோர்
கூரெயிற்றிலொருகூறுபட்டுளதுகொடியபேரவுணனுடலமே. (207)

முரணியன்றனவனுயிர்கவர்ந்தருளுமுளரியங்கண்முகில்வண்ணனே
யிரணியன்றனுயிர்கவருமென்பதெனவெண்ணிவந்ததிதுதிண்ணமே.

நஞ்சுபோலுநயனத்தவன்றவமுளுற்றநான்முகனளித்தநா
ளஞ்சுமேகாடியுளவஞ்சுகோடயலுணிற்பதே. (209)

தூயவானவர்தொலைந்துதோள்சுருங்கவென்றிடைநெருக்குமத்
தீயவாளவுணர்மாயவாழ்வொடுசெருக்கநாளவைசுருக்கமே. (210)

ஆனவாறுதெளிவிப்பதாகவடலாழியான்மருவுமாழியிற்
போனவானவர்புகுந்தபோதசுரர்புங்கவன்றனுயிர்போவதே. (211)

என்னவன்னையிவைசொன்னவெல்லையி
லெழுந்திறைஞ்சியுலகெங்கணுஞ்
சொன்னசொன்னதுறைகற்றுவல்லதொரு
சோதிடத்தலைகைசொல்லுமே. (212

வேறு.

பொற்பார்மதிலணிசோணிதபுரமாகியநகர்வா
ழுற்பாதமவசுராதிபனுயிர்கொள்வனவுளவே. (213)

மொழியின்றிருவருளேயினிமுடிவாவதுகொடியோ
னழியும்...வருகின்றனவடியேனதுகுறியே. (214)

பகல்வானிடையுருமேறெடுபலதாரகைவிழுமே
யிகல்வானவில்பலநாளிடையிருண்மாலையிலெழுமே. (215)

ஓதப்புனல்பருகும்புயலுதிரப்புனலுகுமே
மேதிக்கெழுகதிரோனெதிர்வெயின்மண்டலமிடுமே. (216)

சுழல்சூறைகளெழுமேபலதுகிலின்கொடிவிழுமே
நிழல்சிறுவகளியானைகள்நின்றேதுயில்பெறுமே. (217)

கூகைக்குலமொருகோடிகள்குழறுங்குரல்கொடிதே
தோகைக்குலமனையார்குழல்சுறுணுறுவபலவே. (218)

மின்னேர்சிறுவிடையாயிவைவிளைகின்றதொரளவோ
சொன்னேனிடைசிலவேறுளசொல்லாதனபலவே. (219)

பண்டேயிவைபலதீயவைபயில்கின்றனமொழியக்
கண்டேனினியுலகத்தவர்காணாததொர்கனவே. (220)

வேறு.

பிறைமருவுமிலங்கெயிற்றுப்பெலங்கொள்பேழ்வாய்ப்
பெரியவுடலெரியவிர்கட்பிறழாவென்றிக்
கறைமருவுமிடமிடற்றுக்கனகமேனிக்
கன்றியவெஞ்சினநாகமொன்றுகண்டேன். (221)

அந்நாகமழகுடனின்றாடுங்காலை
யனந்தன்றன்றலையதிரவுலகமேழுங்
கைநாகமிருநான்குங்கறங்குவானோர்
காணாதவ்வகைகரந்துதிரியக்கண்டேன். (222)

மற்றதொருமணியின்றுமகிழக்கண்டேன்
மகிழ்ந்தநனைமனத்தெழுந்தசினத்தாற்றானே
பெற்றதெனவிரங்காதுநெருக்கக்கண்டேன்
பேரொளிமாமணியின்னும்பிறழக்கண்டேன். (223)

அப்பொழுதிலொருகருடன்றோன்றக்கண்டே
னழனாகமாகமிரண்டாகக்கண்டே
னெப்பெழுதவருங்குருமாமணியின்சோதி
யுலகுதொழுங்கதிரொளிபோலொளிரக்கண்டேன். (224)

வேறு.

அக்கணத்திற்றெய்வவணங்கல்லலினிச்சிலநா
ளிக்கணத்திலிரணியன்போமென்னின்றுவியப்பினவே. (225)

வேறு.

கண்டகனவிதுவென்னக்கேட்டவிரணியனைக்
கணங்களதன்பொருள்கேண்மின்கணறன்பாற்
றொண்டமணிவாய்மதலையொருவன்றோன்றுந்
தோன்றவவன்சொல்லிடையே. (226)

சுருதியிலேசுடராழிமுதல்வன்றோன்றுந்
தோன்றவெதிரொன்றவுணர்தொலைந்தபோரிற்
குருதியிலேகளப்பாணிக்கூழுந்தோன்றுங்
குறைதீர்ந்ததெமக்கென்னக்கூறக்கேட்டே. (227)

வேறு.

பேயினமவையிடைப்பெரியதொருவகையினால்
மாய்வனமலர்மகள்சேர்வகுணனைவாழ்த்தினவே. (228)

ஆயசெருக்களங்கண்டடுங்கூழின்றுண்ணவின்றே
வாயகலமளந்தனவேவயிறகலம்பார்த்தனவே. (229)

பாழ்கிடக்கும்பெருவயிற்றின்பசிதீரும்படிநமக்குக்
கூழ்கிடைக்குங்கிடைக்குமெனச்சிலகொடுநாக்கெறிந்தனவே. (230)

தாயுரைக்குஞ்சரதமொழிதப்பாதுதப்பினுமிப்
பேயுரைக்குநிமித்தகதிபிழையாதென்றிருந்தனவே. (231)

வேறு.

ஆகபோகமுற்றநுங்கினைத்தபே
யவையிருக்கவோரலகைவல்விரைந்
தோகையோகைபெருவகையுண்டென
வோடிவந்துமோடியையவணங்கவே. (232)

தோகையோகையேசொல்லுகென்னமால்
துத்திநாகணைத்துயிலுணர்ந்தெழக்
காகநீழல்சூழ்சமரபூமியிற்
கண்டுயின்றனன்கனகனென்றதே. (233)

என்றவாசகஞ்செவிபுகாதமுன்
னிலகுவாளெயிற்றலகையின்குழா
மொன்றின்மேல்விழுந்தொன்றிரைத்தபே
ரொலியையொக்குமேயூழியாழியே. (234)

வேறு.

மிசையெழுந்தனசிலவிழுந்தனவிழிசுழன்றனவே
திசைபரந்தனசிலதிரிந்தனசெயலறிந்திலவே. (235)

சிலகைகொட்டினசிலசிரித்தனசிலகளித்தனவே
யலகையிப்படியலவலைத்தனவே. (236)

குமரிவெட்டியமயிடனெப்புமைகொடுகுளித்தனவே
யமரிகைப்படுமசுரனைச்சிலவவனியத்தளவே. (237)

சொன்னபேயையெடுத்ததோளொடுதுள்ளியாடினவே
முன்னமேகணிசொன்னவாயிடைமுத்தமுண்டனவே. (238)

வேறு.

கண்டகனுவினலங்கழியுமெனக்கணியார்
கண்டகனுவினலங்கெடக்களித்தனவே. (239)

வேறு.

அவ்வகையபெருவகைகண்டருளணங்குமள
வேகையரும்பவினிநீ
ரிவ்வகையில்யாவருமிறைப்பொழுதடக்கமொ
டிருக்கெனவிருந்தபொழுதே. (240)

வந்தமுனுபேயினையழைத்தருளிவாளவுண
ணருடன்வரங்களடையச்
சிந்திவிளையாடியமர்செய்ததிருமால்பெரிய
சேவகம்விளம்புகெனவே. (241)

வல்லதுரைசெய்வனடியேனெனவணங்கிவழிபட்டொருவரால்
வெல்லமுடியாதனமுடிந்தபடிகேளெனவியப்புறவிளம்புமதுவே (242)

தோளுடையவாள்வலியில்வானவர்களானவர்
தொலைந்தபடிசொல்லுமளவோ
வாளுடையநாயகியெனுதவசுராதிபனை
யாதியிலறிந்தருளுமால் (243)

புண்டரிகநாமமுகிலுண்டபதினாலுபுவ
னம்பொதுவழித்தவளவோ
வண்டமிதுபோல்வனவனந்தசதகோடிக
ளிறந்தவனுணையளவே. (244)

அத்தகையனாகியமராபதியிருந்துமுழு
தாளுமசுரேசனொருநா
ளித்தகையபாரிலணிசோணிதபுரம்புக
வெழுச்சியைவிளம்பியெழவே. (245)

வந்திருமருங்கினுநெருங்கினர்வரம்பில
வரம்பையர்வணங்கிவரவே
கந்திருவர்கிம்புருடர்விஞ்சையருடன்கருட
ரென்றிவர்கரங்குவியவே. (246)

சாமரமெடுத்தசையவீசியகரத்தினொடு
சாரணரியக்கர்வரவே
காமருமதிக்கவிகைகாண்வரவுயர்த்ததிசை
காவலர்பிடித்துவரவே. (247)

வானவர்தமக்குமுதலானவர்வடித்தசுடர்வாள்பலபிடித்துவரவே
யேனையர்பெலத்துரகராசரொடரக்கரெறிவேல்கொடுநெருக்கவரவே.

ஆனையுமடற்பரியுமாயுமிரதத்தொகையுமானதிசைமுட்டிமிசைபோய்
வானவர்நெருக்குதலில்வாளகிரியப்புறமும்வாளவுணர்சுற்றிவரவே.

தூயபுனலிற்கனலில்வாசியறவிட்டதொரு
தூசியின்முகத்தினெதிரே
வாயுவிரட்டிவிசைபாயமனமொப்பதொரு
மாவின்மிசைபுக்கபொழுதே. (250)

மேருகிரியிற்பொலியும்வேலைவிளியிற்றுளிகொள்
மேகபடலத்திலொளிசேர்
தாரகைநிலத்தில்விழுதாளகதியிற்குதிகொள்
தாரையின்மிதித்துவருமே. (251)

இன்றுதலைவன்புரிவியொன்றுபலவென்றுரை
மயங்கவுலகெங்குநொடியிற்
சென்றுவருவன்புரவிகொண்டவுணர்நின்றுலவு
செண்டுவெளியண்டவெளியே. (252)

அந்தரமடங்கலுநடந்துவடவிந்தமலையின்றலையின்வந்தடிவிடா
விந்தவுலகந்தொழுதிசைந்துநிலவின்கதிரிழிந்ததெனவந்திழியவே. ()

எறியதுரங்கநிரையாளிகளடங்கலும்விலாழியினிரம்பமிசைபோ
யாறிவருபைம்புரவியேழுபுவியும்பவனியாமெனவிசைந்துவருமே. ()

வாளிவருபைம்புரவியேறிவருகின்றசெயல்
மாகவெளியெங்குநிறையத்
தூளிபடலங்கள்பலதூதுசெலவந்தெதிர்கொள்
சோணிதபுரங்குறுகவே. (255)

தோரணநெருங்குமணிமாளிகைநெடுந்தெருவு
தூணுறைபொதிந்தகனபொற்
பூரணகுடங்கள்பலபாலிகையணிந்தருகு
பூமழைபொழிந்துவரவே. (256)

மேனிவியர்கண்டுகடிதோடியெதிர்கொண்டசைய
வீசுகுளிர்தென்றல்வரவே
வானிலெழுகொண்டல்பொழிசீகரமுகந்தவிள
வாடையுமருங்குவரவே. (257)

மாபுரசனங்கள்பலர்வாழியெனவந்துவய
மாவின்மிசைநின்றுமதிதோய்
கோபுரநெடும்புரிசைவாயிலினிழிந்தசுரர்
கோயில்புகுதும்பொழுதிலே. (258)

ஆனையிரதம்புரவியாளணியடங்கவினிதாறுகவரம்பையர்மதன்
சேனையிலிடஞ்செறிகதேவரொடுசெந்தருவுசேரவிடுகென்றுபுகவே.

வேறு.

சென்றதாரணிநின்றபேரணிசேரவிட்டதுபாரெலாம்
வென்றதானையதன்பெருந்தொகைவெள்ளமாயிரகோடியே. (260)

தொட்டவார்கழலசுரர்பூபதிசொன்னபேரொருமுறையினால்
விட்டதானையடங்கமாநகர்வெளிகிடந்ததுவீதியே. (261)

செங்கண்மாலிருபாதமோதமிழ்செய்தமாமுனிசெங்கையோ
வங்கண்மாநகரதுகொலோவளவுடையதே. (262)

அன்னமாநகரவுணர்காவலனசுரர்கோயிலகம்புகப்
பொன்னின்மால்வரைபணியவந்தனர்கடையில்மங்கையரடையவே.()

சொன்னமங்கையர்தொழுமடந்தைசுகந்தமாலைவரக்களித்
தன்னமென்றுணைவருகவென்றுடனாசனத்திலிருத்தியே. (264)

கங்கைமாமகள்கன்னிபொன்னிகலந்தெடுத்தகடாரநீர்
கொங்கையான்மெலியுங்குலக்கொடிகூடமஞ்சனமாடியே (265)

உடைபுனைந்தினிதமுதருந்தியுயர்ந்ததாருமலர்ந்தபொற்
றொடைபுனைந்துயர்கோயிலிற்சுடர்தோயுமுன்றிலினேறியே. (266)

நின்றுலாவருபோதிலேநன்னிறஞ்சிவந்தெழுசெக்கர்வா
னின்றுசாலவுநன்றுகொண்டருளென்றுதென்றலிசைக்கவே. (267)

வாடையார்விடைகொள்கவிசுகமன்றலார்குளிர்தென்றலார்
வேடையானதுமேனிமிர்ந்திளவேனிலானும்விளம்பவே. (268)

காணலாமினியென்றுசீதளகலைநிரம்பியவடிவெலாம்
வாணிலாவெழவானவீதியில்வந்துசந்த்ரன்வணங்கவே, (269)

அளகையம்பதியிறைவனுந்தொழுதருகுநின்றிலர்முருகுதோ
ளிளகுசந்தனமருகுகுங்குமமிருபுயங்களிலெழுதவே. (270)

வருணன்வந்தினிதரளபந்தியின்மணிவடம்பலபுனையவே
யருணையந்தனதருகுவந்தனரசுரர்மங்கையராடியே (271)

சூழிசைக்குரலாதிநாரதர்தும்புருக்கள்பயின்றசீர்
யாழிசைக்கிசையப்புகுந்திளமங்கைமென்கையராடியே. (272)

அந்திமாலைவந்தெடுத்தவரம்பைமாதர்விளக்குடன்
சிந்துதாரகையுங்கலந்துயர்சேண்விசும்புவிளங்கவே. (273)

யாமமொன்றுகழிந்தவெல்லையிலெம்பிரானினியெங்கணுஞ்
சேமமென்றுயர்கோயில்காவலர்சென்றிறைஞ்சினர்நிற்கவே. (274)

தோகைமாமயிலன்னமங்கைசுகந்தமாலைபுகுந்திடப்
போகவானவரென்றுதானொருபொங்குபூவணைதங்கவே. (275)

மைகலந்தனவோதிசோதிவடங்கொள்கொங்கையுமார்பமுங்
கைகலந்தனநெஞ்சுபோலிருகண்கலந்தனர்தம்மிலே. (276)

ஆரமாமுலைகுமுதவாயிதழமுதபானமுமளவிலா
வீரபானமுமகிழ்தலான்மிகமெய்மயங்கிமுயங்கவே. (277)

மால்வளைந்தெழுகாதல்கூரமனங்கலந்தவனங்கன்விற்
கால்வளைந்துளமேல்விளைந்ததுகட்டுரைக்குமதல்லவே. (278)

வந்தமாலைசுகந்தமாலைமணங்கலந்துபுணர்ந்தபி
னந்தநான்முதலாறுவெண்பிறையன்றுபோலிடைசென்றதே. (279)

வேறு.

தேவியுடன்கலந்தவுணன்றிளைக்குநாளிற்
றேவரெல்லாந்திருமால்பாற்றிரண்டுசென்றே
மேவியபாற்கடலடங்கமுறையிட்டார்ப்ப
மேல்விளைந்தபடியடியேன்விளம்பக்கேளீர். (280)

பாற்கடலுமொலியடங்கவார்க்குந்தேவர்
பலமுறையுமுறையிடலும்பதுமம்பூத்த
கார்க்கடலுந்துயிலுணர்ந்துவருகவென்னக்
காவல்புரிசங்ககன்னன்காட்டக்கண்டே. (281)

பூமகனேமுதலாயதேவரெல்லாம்
போற்றியிருகழல்போற்றிபோற்றியென்ன
வாமகனேவானவரும்நீயும்வந்த
வரவென்கொலெனவவனும்வணங்கியாங்கே. (282)

தானவரிவிரணியனென்றொருவன்றோன்றிச்
சகதண்டமுழுதினையுந்தன்பேராக்கி
வானவரைநலிகின்றானிதுவேயெங்கள்
வார்த்தையென்னமழைமேகவண்ணன்பார்த்தே. (283)

சங்குகன்னநீயவன்பான்மகனுய்த்தோன்றித்
தானவன்முன்னுமவன்பாற்சார்வுதோன்றிப்
பொங்குகின்றசினத்தோடுந்தோன்றுகின்றோம்
போமினெனவிடைகொண்டுபோந்தபின்னே. (284)

நாரதனுமொருநாள்வந்தவுணன்றேவி
நல்வயிறுவிளங்குகெனநால்வேதத்தி
னோதினுலொருகீதம்பாடிவாழ்த்த
விண்ணவர்களெண்ணமெலாம்விளைந்ததன்றே. (285)

நன்றானபேரறமுமுலகுஞ்செய்த
நலந்தருமாதவங்கலந்துஞாலமெல்லா
மொன்றானதிருவுருவங்கருவாயுள்புக்
கொன்றிரண்டுநிறைமதியநிறைந்தபின்னே. (286)

காணுதசிறுமருங்குல்கருவுட்காட்டிக்
கலைதளர்ந்துமுலையிருகண்கருத்துவிம்மிப்
பூணுதகனகமுடன்குறுவேர்பூத்த
பொலங்கொடியையிலங்கிலைவேற்பொன்னன்பார்த்தே. ()

உண்டிவள்பாற்கருப்பமெனவிருப்பமெய்தி
யுலகமெலாந்தனித்தனிவந்துவகைகூறக்
கொண்டிவளையிறைபிரியாதிருந்தானென்றுங்
கூற்றுவனும்போற்றியிடுங்குணலைகண்டே. (288)

அய்யிரண்டுதிங்களினுமிரண்டுமொன்று
மாறிரண்டிற்பதினொன்றேயணைந்துநிற்கச்
செய்யவன்றேர்குணதிசையினுதயஞ்செய்யத்
திருமகனைத்திருவுயிர்த்தாள்தேவியாங்கே. (289)

வேறு.

அமராடவமர்மாதருடனாடவசுரேசனணிகற்றமா
தவரோடுநடமாடுமுரகேசர்சதகோடியே. (290)

நின்றாடுமவராடல்புதிதல்லவதுநிற்கநெடுமால்பால
மன்றாடவந்தாருநடமாடினார்தம்பின்மாறாடியே. (291)

தாராடவாழ்மவுலிதானாடவானாடர்தமராதியாய்
நீராடைசூழ்பாரிலாடாதபேரில்லைநெய்யாடலே. (292)

பாரிட்டபாரந்தவிர்த்தான்வரும்பன்னிரண்டாகுநாட்
பேரிட்டதப்பேரழைத்தண்டர்கொ......டும்பிறகிலாதனவே. (293)

பெரிதன்பினால்வந்தெடுத்தெம்மையாளப்பிறந்தானிவன்
முருகன்கொலென்பார்முகுந்தன்கொலென்பார்புகுந்தார்களே. (294)

பூமங்கைபார்மங்கைபோர்மங்கைஞானப்பொருட்பால்தரு
நாமங்கையிவரேநலத்தான்வளர்க்குமுலைத்தாயரே. (295)

வேறு.

ஊன்வளருமயில்வேலானுயிரனையதிருப்புதல்வன்
வான்வளரமண்வளரமறைவளரவளர்ந்தனனே. (296)

தானவர்தங்குலமதலைவளர்ந்ததெல்லாந்தனித்தனியே
வானவர்தங்கரங்களினுமறையுணர்ந்தோர்மனத்தினுமே. (297)

தடையிலவனொருவனுமேவளர்ந்ததுடன்சராசரங்க
ளடையவளர்ந்தனனதொன்றுமசுரேசனறிந்திலனே. (298)

வேறு.

தாரணிநறுங்குழலசைந்திடவிசைந்தணிகலன்கலனெனத்
தாரணிவருந்தியபெருந்துயர்கெடும்படிதவழ்ந்தருளியே. (299)

அன்னெறியடங்கலுமடங்கவுமருந்துயர்பொருந்தியகல
நன்னெறிமறந்தனகிடந்தவைதுடங்கவுநடந்தருளியே. (300)

ஐந்துபருவமற்குறுமெல்லையினிலாரமுதமூறுமணிவாய்
வந்துபருவங்குலவுமாமறைகலந்தமதுரக்கிளவியே. (301)

அந்தமதுரக்கிளவிசிந்தைதையயுருக்கவசுரேசனொருநாள்
மைந்தனையெடுத்துவரைமார்புறவணைத்துமகிழத்தழுவியே (302)

அம்பொன்மணிமண்டபம்விரும்பியாசனநிரம்பவதன்மே
லும்பருடனிம்பருநிறைந்தடியிறைஞ்சிடவிருந்தபொழுதே. (303)

ஒப்பரியகாதலனையாதரவினுவினிதுணர்ந்துமகவை
யிப்பருவமேகலைகளோதுவதியாவருமெனக்கருதியே. (304)

ஒள்ளியபுரோகிதனைவெள்ளியையழைத்திவனுணர்ந்துதெளியத்
தெள்ளியருமாமறைகள்பள்ளியினிலோதுநெறிசெப்புகெனவே (305)

வேதியனொருத்தனிடைவேதமுதல்நாயகனைவிட்டிவனைநீ
யோதுவியெனப்பெருகவந்தணனுமைந்தனையுவந்தருளியே. (306)

நன்றுமிகநன்றிறைவநாகரிகனுலமிர்தயோகமெனுநா
ளின்றுதிருமைந்தனையிருத்துகதிருத்தகுமுகுத்தமெனவே. (307)

எந்தைவருகென்றலுமிறைஞ்சினனிருந்தபொழுதென்றுணைவநீ
யுந்தையைநினைந்திரணியாயநமவென்றுமுதலோதுகெனவே. (308)

சென்றிருசெவித்துளைபுதைத்தனதிருக்கைசிறுபாலகன்முகங்
கன்றினமலர்க்கமலமொத்தனகருத்தளவுரைக்கவரிதே. (309)

ஆதகவுரைத்திலையயர்த்தனையறிந்திலையருந்தவவெனு
மேதருகலைச்சுருதியுட்படுவெளிப்பொருள்விரித்தலறியே. (310)

வேறு.

கோதிலாவானுடர்காதல்கூருவார்பேராசைதீர
வோதினுனோதாதபாலனோநமோநாராயணாய. (311)

சாமமாய்மூவாதவேதசாகையாயாகாதிவேள்வி
யோமமாய்வீடானநாமமோநமோநாராயணாய. (312)

வேதயாதாரமானமேனிமால்பாலானவேலே
யோதிநீரானுதிநாமமோங்மோங்காராயணாய. (313)

வேறு.

என்பெலாமுருகுசிந்தைமைந்தனிவையெட்டெழுத்தையுமெடுத்து
தன்பினுளிருகையஞ்சலித்தருளியாகமும்புளகமாகவே. [ரைத்

நின்றுவேதியனடுங்கிநீயி துநினைந்ததென்கொல்திருமைந்தனே [வே.
யின்றுவேரொடுமுடிந்ததென்குடியிதென்னபேர்மொழிவதென்ன

வானறிந்தபெயர்மண்ணறிந்தபெயரெண்ணிறைந்தமதியொன்றிலா
நானறிந்தபெயர்நீயறிந்திலைகொல்நாரணன்பெயரிதென்னவே. (316)

வேதவந்தணன்வெகுண்டுமேலுரைவிளம்பிடாவுயிர்தளம்பிநீ
யோதவந்தபடிபோதநன்றெனவொடுங்கியாகமுநடுங்கவே. (317)

ஓடினனசுரர்பூபதிக்கிவையுணர்த்துவானொருகணத்தினிற்
கூடினனடிபணிந்துமைந்தனிலைகூறினனுணர்வுதேறியே. (318)

தீயில்வந்ததொருநஞ்சமொப்பனசெவிக்கினுதகிலசொற்கடான்
வாயில்வந்தனவுரைத்துமன்னவவுன்மைந்தனோதுகிலனென்னவே.()

என்னவாசகமதென்னவேதமுனியெம்பிரானவையியம்பிடிற்
சொன்னவாய்கிழியுநாவுமாவியொடுசோருமென்னுயிர்துளங்கவே.()

தருககாதலனையென்றலுங்கொடியதாதையேவலொடுதூதர்போய்
வருகமாமதலையென்னவந்தவனுமன்னவன்கழல்வணங்கியே. (321)

ஆயகாதலனைமார்புறத்தழுவியன்பினோடருகிருத்திநீ
தூயவேதியன்மொழிந்திடப்பழுதுசொன்னதென்னவுரைசெய்கவே.

எந்தைகேள்பழுதுரைத்திலேன்முழுதுமின்மையேபெறவியம்பினேன்
முந்தைவேதநெறியோதுகின்றதொருமூலமந்திரமிதென்னவே.(323)

ஆனதாகவதுபேசெனுவசுரனுணைகூறவெதிரோதினன்
ஞானவாரிதருவேதநாமநாராயணாயவெனுநாமமே. (324)

மெய்யையொத்ததிருநாமமாகுதியில்வேதவேள்வியிடைபோதவிழ்
செய்யையொத்தவன்மேனிமேலெழுநெருப்பையொத்ததவனெஞ்
[சமே. ()

கன்றானென்றெனவழன்றதானவனகைத்தவாயெழுபுகைக்கனற்
சென்றுபொங்கியிருகண்களுங்கடைசிவந்தெரிந்துபொரிசிந்தவே. ()

விண்சுழன்றுதிசையுஞ்சுழன்றுவிடமேருமால்வரையசைந்துகீழ்
மண்சுழன்றனமருங்குநின்றவர்மயங்கினாதிபயங்கொடே. (327)

ஏதிவன்கருதியெண்ணுகின்றதினியென்செயுங்கொலெனமுன்னமே
வேதியன்குலைகுலைந்துநிற்கமிகவெள்ளியாருடல்வெளுக்கவே. (328)

வாரடாசிறுவரீயடாதனவருக்கவல்லையெனினில்லைமற்
றாரடாமுதலியம்பினாரெனவடங்கவானவர்நடுங்கவே. (329)

சொன்னபேருடையகேமியானெதிர்கடந்துநானமர்கடந்துநா
ளன்னபோரிலவனஞ்சியோடும்வகையடையவானவர்களறிவரே. ()

முன்னமோடைமலையோடவிண்பறவைமுடுகியோடவதினிலைவிடா
தன்னமோடவிடையோடவோடும்வகையடையவானவர்களறிவரே. ()

அன்றுபோனவர்கள்போனபின்பகிலலோகமெங்குமெனதாணையே
சென்றுபோதவிடைநின்றுவாழுமவர்சேமமென்னுடையநாமமே. ()

ஆதலாலமரரஞ்சிவந்தடிவணங்குவாரெனையறிந்துவைத்
தோதலாயதுபயின்றதாருடனுரைத்தியீதெனவுறுக்கியே. (333)

கற்கநாவெழுவதோவெடாவெனதுகாவலாணைகடவாதபேர்
நிற்கநானரசிருக்கநீயிதுநினைந்ததென்னெனநெருக்கியே. (334)

எனமொன்றெனவெழுந்துவந்தெமையனுவியுண்டவனையின்றுநீ
மானமின்றியெதிரோதவோவுனைவளர்த்ததென்றிவைகிளத்தியே. ()

நின்றவன்பொடுநிறைந்திருந்தவெனெடுங்குலங்கிளையடங்கலுங்
கொன்றவன்பெயருரைப்பதோசிலகுணங்களென்றுபலகூறியே (336)

அளவிலாதசினமுடையகோளரியையுரியகாதலுடனடிபணிந்
திளவியானைமுறைபாவினுவிறையிரங்குமோவெனநெருங்கியே. (337)

சொல்லொணாதபெயர்சொல்லிநீமிகைதுடங்கினாயதுகிடக்கமுன்
சொல்லொணாதபடைவெல்லொணாதுபலகூறலென்கொலெனவாறியே